"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம் : 1876

சத்தியவேத
பாதுகாவலன்

தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம் தொலைபேசி : 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு மார்கழி மீ 15-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 10 | 50-ம் இலக்கம்

### நத்தால் சிறப்பிதழில்

- பாசம் அளித்த பரிசு — நத்தால் சிறு கதை.
- அமைதி கண்டாள் — மனந்திரும்புதல் வரலாறு.
- எல்லாம் நன்மைக்கே — சிறு கதை.
- எனது ஆபிரிக்க யாத்திரை — மொம் பாசா நகரில் குரவரின் சுற்றுலா.
- பேசும் பேனா — சில சுவையான கிறிஸ் மஸ் வரலாறுகள்.

# பாப்பரசரின் தேகநிலையில் அபிவிருத்தி?

பாப்பரசரின் தேகநிலையில் சிறிது அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகச் சில செய்திகள் வெளிவந்துள்ளன. ஆயினும் அவரது சத்திரசிகிச்சைபற்றியோ அதற்குப்பின்னர் உள்ளதேகநிலைபற்றியோ இதுவரை உத்தியோக பூர்வமாக எதுவும் தெரிவிக்கப் படவில்லை.

சென்றவாரம் வெளியிடப்பட்ட செய்திகளின் பின்னர் இம்மாதம் 2-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பரிசுத்த தந்தை தமது மாளிகையின் சாளரத்தினூடாக இராயப்பர் மகாலயச் சதுக்கத்தில் காத்திருந்த முப்பதாயிரத்துக்குமதிகமான யாத்திரிகர்கட்குச் சிலநிமிடங்கள் தரிசனை தந்தாரெனச் செய்திகள் கிடைத்துள்ளன. சில தினங்களாக என்னைப்பீடித்திருந்த பலவீனத்திலிருந்து யான் விடுதலையடைந்துவருகிறேன் எனப்பரிசுத்த தந்தை இப்பொதுத்தரிசனையின் போது குறிப்பிட்டார். இத்தரிசனை ஏழுநிமிடங்கள்வரை நீடித்தது. பாப்பரசரின் வதனம் வாட்டத்துடனும், வெளிறியும் காணப்பட்டதென அவதானிகள் குறிப்பிட்டனர். அவரது கம்பீரமான குரல்தொனியில் எவ்வித மாறுபாடும் இருக்கவில்லை. ஆயினும், ஒவ்வொரு வார்த்தைகளையும் உச்சரித்தபின் மூச்சு இழுப்பதற்காகச் சிலவினாடிகள் கஷ்டப்படுவது நன்கு புலனாகியது. பாப்பரசர் தரிசனையளிக்கும் போது பின்பக்கமாகத் தொங்கிய ஊதாவர்ணத் திரைகளின் மறைவில் பாப்பரசரின் குடும்ப வைத்தியர் நின்றவண்ணம் பரிசுத்த தந்தையின்ஒவ்வொருஅசைவையும் அவதானித்துக்கொண்டிருந்தார்.



இலங்கையின் அமலோற்பவ பரித்தியாகிகளின்

### புதிய சிரேஷ்டர்

சென்ற மூவாண்டுகளாக இலங்கை அமலோற்பவ பரித்தியாகிகள் சபைக்குருமாரின் சிரேஷ்டராகவிருந்த அதி வண. அலெக்ஸ் சேரு, O. M. I. சுவாமியார் அவர்களினிடமாக வண. அந்தோனி பர்னாந்து, O. M. I. சுவாமியார்அவர்கள் நியமனஞ் செய்யப்பெற்றுள்ளார்.

புதிய சிரேஷ்டர் 1936-ம் ஆண்டு ஆனிமாதம் 27-ந் திகதி குருவாக அபிஷேகம் செய்யப்பட்டவர். நீர்கொழும்பு, தொப்பு, பலங்குத்துறை ஆதியாம் இடங்களில் கட்டளைக் குரவராகப் பணியாற்றியவர். சென்ற ஆறுவருடங்களாக நீர்கொழும்புப்பகுதிப் பிரதம குருவாகவும், 1959-ம் ஆண்டு தொடக்கமாக இலங்கை அமலோற்பவ பரித்தியாகிகளின் ஆலோசனைச் சபையின் அங்கத்தினராகவும் கடமையாற்றி வந்திருக்கிறார். இவருக்கு வயது 52.

### இந்திய வானொலியின் கிறிஸ்மஸ் ஒலிபரப்பு

வழக்கம்போலவே இத்தடவையும் அகில இந்திய வானொலி நிலையத்தார் நத்தால் பண்டிகையை முன்னிட்டுச் சில விசேட நிகழ்ச்சிகளை ஒலி பரப்பவிருக்கின்றனர்.

24-ந்தேதி திங்கட்கிழமை 5-45 தொடக்கம் திருச்சி கத்தோலிக்க கலைமன்றத்தார் அளிக்கும் நத்தால் நிகழ்ச்சி ஒலிபரப்பாகும். இதன் மறு ஒலிபரப்பை இரவு 9-15-க்குக் கேட்கலாம். வண. சுவாமி மரியநாயகம் அவர்கள் இடையே உரை நிகழ்த்துவார். திருச்சி கலையரசி பாடகர் குழாம் இன்னிசைக் கீதங்களை இசைக்கும்.



பரிசுத்த பாப்பரசர் வத்திக்கான் சங்கத்தில் கலந்துகொண்ட இலங்கை ஆயர்களுக்கு கார்த்திகை 26ஆம் தேதி தமது வாசஸ்தலத்தில் பிரத்தியேக பேட்டி அளித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

## பொதுச்சங்க அலுவல்கள் தீவிரமாக நடைபெற்றன

வத்திக்கான் பொதுச்சங்கத்தின் முதலாவது தவணைத்தொடரைமுடிப்பதற்காகச் சங்கத்தில் கலந்துகொள்ளும் ஆயர்கள் சென்றவாரத்தில் மிகத்தீவிரமாகச் செயலாற்றினர் என அறியக்கிடக்கிறது. வழமையாக வியாழக்கிழமைகளில் சங்க பிதாக்களுக்கு ஓய்வுதினமாகும். ஆயின் சென்ற ஆறுந்திகதி வியாழக்கிழமையும் சங்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பொதுக்குழுக்கள் சங்கத்தில் தெரிவிக்கப்பட்ட தீர்மானங்களில் சங்கபிதாக்களால் தெரிந்து கொள்ளப்பட்டவைகளையெல்லாம் சேர்த்து மசோதாவடிவில் சட்டவழுக்களின்றி உருவாக்குவதில் இராப்பகலாக ஈடுபட்டனர்.

## காமன்வெல்த் மேற்றிராணிமார்களின் சந்திப்பு

காமன்வெல்த் என அழைக்கப்படும் பிரித்தானிய பொதுநலக் குடியரசில் அங்கம்வகிக்கும் எல்லாநாடுகளையும் சேர்ந்த 250 ஆயர்கள் அண்மையில் ரோமாபுரியில்பொதுக்கூட்டமொன்றில் பங்குபற்றினர். இவர்களனைவரும் பொதுச்சங்கத்தில் கலந்து கொள்வது நேயர்கள் அறிந்ததே.

இவ்விதி மேற்றிராணிமாரின் சந்திப்புக்கு அடிகோலியவர் இங்கிலாந்தின் கர்தினால் கொட்பிறி ஆண்டகையாவர். ரோமாபுரியிலுள்ள கிரகோரியார் சர்வகலாசாலை மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கர்தினால் கொட்பிறி ஆண்டகை தலைமைதாங்கினார். முதலில் காமன்வெல்த் ஆயர்களின் சார்பில் இரண்டாவது எலிசபேத் மகாராணியாருக்கு வாழ்த்துச்செய்தியொன்று அனுப்பப்பட்டது. இரண்டாவதாக பாப்பரசரின் பிறந்தினத்தையொட்டிய வாழ்த்துச்செய்தியொன்றும் அனுப்பப்பட்டது.

காமன்வெல்த் நாடுகளிடையே நிலவும் பொதுப்பிரச்சனைகள் சம்பந்தமாகப் பின்னர் இருமணித்தியாலங்கட்குமேலாகச் சல்லாபம் நடைபெற்றது.

### 21-12-62 வெள்ளி சுத்தபோசனமும், ஒருசந்தியும்.

### விஞ்ஞான ஞாயிறு

விசுவாசப்பரப்புதல் ஞாயிறு, அச்சுப்பிரசுர ஞாயிறு என்றெல்லாம் சத்திய திருச்சபையில் கொண்டாடப்படுவதுபோல விஞ்ஞானத்துக்கும் ஒரு ஞாயிறுவை ஒதுக்குதல்வேண்டும் என பேரறிஞர் புல்டன் ஷீன் ஆண்டகை ரோமன் அவதானி பத்திரிகையின் நிருபருக்களித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார். இத்தினத்தில் புதிய கண்டுபிடிப்புகளைத்தந்த இறைவனுக்கு நன்றிசெலுத்துவதுடன் [illegible] நாளில் விஞ்ஞானிகளைச் [illegible] பாக கத்தோலிக்க விஞ்ஞானிகளைப்பற்றி அறியவும், விஞ்ஞானத்தின் பெருமைகளின் மூலம் இறைவனின் வழிகாடவும் நாம் முயற்சித்தல் வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதஸ்தாபன பாடசாலைகள்

கொழும்பிலே அன்று வெள்ளிக்கிழமை சகிராக்கல்லூரிப் பழையமாணவர் சங்க வருடாந்த விருந்துநடைபெற்று, அதிலே திரு. வில்மட் பெறேரு அவர்கள்பேசியபோது: "மதஸ்தாபன பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதென்பது காலஞ்சென்றபிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கையாக ஒருபோதும் இருக்கவில்லை; பாராளுமன்ற இருசபைகளினதும் பொறுக்குக் கமிற்றியானது மதஸ்தாபன பாடசாலைகள் தொடர்ந்துஇயங்க அனுமதிக்கப்பட வேண்டுமெனச் சிபாரிசு செய்திருந்தது; அவைகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்ற யோசனையே காலஞ்சென்ற பிரதமருக்கு இருக்கவில்லையென்று என்னால் திட்டமாகச் சொல்லமுடியு"மெனக் கூறியிருக்கின்றார்.

## ஆசிரியர்களின் உரிமைகள்

"அரசாங்கம பாடசாலைகளைத் தேசியமய மாக்கியதன்மூலம் ஆசிரியர்கள் வீட்டுவாடகை, புகையிரதப்பிரயாணச் சீட்டு ஆகியன பெறுகின்றனர்; ஆனால், அவர்கள் தங்களுக்கிருந்துவந்த அரசியல் உரிமைகள்போன்ற அநேகஉரிமைகளை இழந்துவிட்டனர்; இன்று அவர்கள் சுதந்திரமாக எதையும்செய்யமுடியாதநிலையில் இருக்கின்றனர்; இந்தநிலையிலே அவர்கள் தங்கள் சங்கங்களில் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்" எனச் சென்றசனியன்று யாழ்ப்பாணம், சென் ஜோன்ஸ்கல்லூரி மண்டபத்தில்நிகழ்ந்த அகிலஇலங்கை ஆசிரியர்சங்க வருடாந்தகூட்டத்திலே அதன் முன்னாள் தலைவர் திரு.என்.சபாரத்தினமவர்கள் பேசியபோது குறிப்பிட்டிருக்கின்றார்.

## மற்றோர் எடுப்பும் நின்றது

சிங்களம்படிப்பிக்கப் போதிய சிங்களப்பாடசாலைகள் இருக்கத்தக்கதாய் நீர்கொழும்பு மாவட்டத்திலுள்ள (1) முன்னக்கரை தமிழ்க்கலவன்பாடசாலை, (2) சென்மேரிஸ் தமிழ் ஆண்பாடசாலை, (3) சென்மேரிஸ் தமிழ்ப் பெண்பாடசாலை, (4) கடற்கரைத்தெரு தமிழ் ஆண்பாடசாலை, (5) கடற்கரைத்தெரு தமிழ்ப் பெண்பாடசாலை, (6) குடப்பாடு, தமிழ்க்கலவன்பாடசாலை, (7) பாலகத்தேரை தமிழ்க்கலவன்பாடசாலை, (8) தூருணை தமிழ்க்கலவன் பாடசாலையாகிய எட்டுத் தமிழ்ப்பாடசாலைகளும் வருகிறதைமாதம் 1-ந்திகதி தொடக்கம் சிங்கள-தமிழ்ப்பாடசாலைகளாகப் பெயர்மாற்றம் செய்யப்படுமெனக் கல்விப்பகுதி அறிவித்திருந்ததை அப்பாடசாலைகளில்கல்விபயின்றுவரும் மாணவர்களின்பெற்றார் ஆட்சேபித்தமையாலே அவ்விதம் பெயர்மாற்றஞ் செய்வதைக் கல்விமந்திரி நிறுத்திவிடுமாறு உத்தரவுபிறப்பித்திருக்கின்றார்.

## மாபெரும் தியாகம்

காத்தானையைச்சேர்ந்த அந்திமுல்லையிலுள்ள கத்தோலிக்க பாடசாலையில் கல்விப்பொருட்காட்சிஒன்றை அன்று ஞாயிற்றுக்கிழமை மேல்மாகாணக் கல்விஅதிகாரியான திரு. எல். ஆர். பெறேரு திறந்துவைக்கையில், "தங்கள் உயிர்நாடிபோன்று தாங்கள் பரிபாலித்துவந்த பாடசாலைகளை அரசாங்கத்திடம் ஒப்படைத்ததாலே கத்தோலிக்ககுருமார் எக்காலத்திலாவது அறியப்பட்ட மாபெருந்தியாகத்தைச் செய்திருக்கிறார்கள்; ஒருதேசிய கல்வித் திட்டத்தை உருவாக்குவதில் கத்தோலிக்க பாடசாலைகள் மாதிரியாக எடுத்துக்கொள்ளப் படவேண்டும்; புதியகல்வித்திட்டம் எந்தஒருசமயம், அன்றேல் சாகியத்தின் உணர்ச்சிகளைப் புண்படுத்தமாட்டா"தெனப் பேசலாயினர்.

## அரசாங்க அதிபரின் மாதிரிகை

மன்னார்ப்பட்டினத்திலே அரசாங்க அதிபர் வாசஞ்செய்யும்இல்லம் அமைந்துள்ள விசாலமானகாணி வத்தாலை பயிரிடுவதற்கென்று உழப்பட்டிருக்கிறது. மன்னார் மாவட்டத்திலுள்ள சாரணமாணவர்களே அதனை உற்பத்தி செய்வார்கள். விவசாயப்பகுதியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "அதிகஉணவு உற்பத்திசெய்க" என்ற இயக்கத்தில் மன்னார் அரசாங்கஅதிபர் திரு. என். பி. ஜெகநாதன் அவர்கள் ஈடுபட்டு ஒரு முன்னோடியும், முன்மாதிரியுமாகக் காணப்படுகின்றார். விவசாயப்பகுதியும் கடந்தசிலவாரங்களாகப் பொதுமக்களுக்குப் பல்லாயிரக்கணக்கான காய்கனி, மரக்கறிநாற்றுகளைப் பகிர்ந்தளித்து வருகின்றது.

## புரட்சிச் சதிவழக்கு

புரட்சிச்சதியையிட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் 24பேருக்கும் சென்றவியாழக்கிழமை சுப்பிறீங்கோட்டு றெஜிஸ்தாரால் சமன்ஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் வருகிற தைமாதம் 16-ந் திகதி புதன்கிழமை சுப்பிறீங்கோட்டில் சமுகமாகவேண்டுமென்று அதிலே கட்டளை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

## இலஞ்ச விசாரணைக் கமிஷனர்

நிரந்தர இலஞ்சவிசாரணைக் கமிஷனராகத் திரு. வி. ரி. பண்டித குணவர்த்தன இம்மாதம் 17-ந்திகதிமுதல் நியமனஞ்செய்யப்பட்டிருக்கிறார். தற்போதுஇவர் மாவட்ட சிரேஷ்டநீதிபதியாகக் கடமையாற்றிவருகின்றார். 1959-ம்ஆண்டுமுதல் சென்றகார்த்திகை 30-ந்திகதிவரை இலஞ்சக்கமிஷனர்பகுதிக்கு 1,643இலஞ்சப்புகார்கள் கிடைத்துள்ளன. இவ்வருடத்தில் மட்டும் கிடைத்தபுகார்கள் 271.

# குட்டி உச்சி மகாநாடு

சீன—இந்திய எல்லைத்தகராறைத் தீர்க்க வழிகாணும்பொருட்டும், ஆசியாவிலே சமாதானம்நிலவ அடிகோலும்பொருட்டும் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்காகூட்டிய ஆ[illegible] ஆசிய—ஆபிரிக்கநாடுகளின் குட்டிஉச்சிமகாநாடு சென்றதிங்கட்கிழமைமுதல் கொழும்பிலே செனற்சபைக்கட்டடத்தி[illegible] பெறலாயிற்று. கம்போடியா, [illegible] இந்தோனேஷியா, ஐக்கியஅரபுக்குடியரசு, கானு, இலங்கையாகிய ஆறுநாடுகளினதும் பிரதிநிதிகள் இதிற்கலந்து இந்தியாவும், சீனுவும் யுத்தத்தை நிறுத்திவிட்டுப் பேச்சுவார்த்தைமூலம் சமாதானத்துக்கு ஒருவழிகாணுமுகமாகக் கலந்துரையாடினார்கள்.

### பண்ணை ஊர்காவற்றுறை வீதி

தற்போது அதிகம் போக்குவரத்துடையதாய் இருந்துவரும் பண்ணை-ஊர்காவற்றுறைவீதியின்ஒருபகுதி மிகமோசமாகச் சீரழிந்திருப்பதால் அதிலே பஸ்களைச் செலுத்தமுடியாதிருப்பதாக அவற்றின் சாரதிகள் முறையீடு செய்துள்ளனர். அவ்வீதியிலே பஸ்களைச் செலுத்துவதினால் அவற்றிற்குச் சேதமும், பி[illegible]யாணிகளுக்குக் கஷ்டமும், சிலசந்தர்ப்பங்[illegible]ளில் தங்களுக்கே ஆபத்துக்கேதுவான அபாயங்களும் ஏற்படுவதாக அவர்களின் முறையீட்டிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# "வரவேண்டியவர் நீர்தாமோ......."

ஆதியில் மக்களின் உள்ளங்களிலே கிறீஸ்துநாதரின் வருகையைப்பற்றித் தப்பபிப்பிராயங்களும், வீண்பிரச்சனைகளும் எழுந்துகொண்டிருந்தன. இப்பிரச்சனைகாரணமாகவே அருளப்பர் யேசுநாதரிடத்தில் "வரவேண்டியவர் நீர்தாமோ அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கின்றோமோ" என்றகேள்வியைக் கேட்டிருந்தார். அதுபோலவே நவநாகரிகம் மலிந்துள்ள இன்றையஉலகிலும் ஊழல்களில் தாண்டவமாடித் தலைகாட்டும் பிஞ்சுஉள்ளங்களில் கிறீஸ்துநாதருடைய வருகையைப் பற்றி வீண் ஆட்சேபனைகள்எழுகின்றன. ஆதியில் சனங்கள் கிறீஸ்துநாதரைக் குறித்து வினவியதுபோல இன்றும் திருச்சபையினிடத்தில் வினவ ஆரம்பித்துவிட்டார்கள். திருச்சபை ஆகமனகாலத்தைக் கொண்டாடுவதின் காரணம், அதாவது: மக்களின் உள்ளத்திலே நிலவிவருகின்ற ஊழல்களைக் களைந்து கிறீஸ்துநாதருடைய பிறப்பிற்கு நம் உள்ளங்களில் ஞானமாகிய பயிரை வளர்ப்பதாகும்.

பழையஏற்பாட்டிலே இஸ்ரேயேல் சனங்கள் இரண்டுசத்தியங்களையே உறுதியாக விசுவசித்து வந்தார்கள். அவற்றுள் ஒன்று எம்மைப்படைத்த சருவேசுரன் ஒருவரே அவரைத்தவிர வேறு ஒரு சருவேசுரனும் எமக்கில்லை. இரண்டாவது எம்மை இரட்சிப்பதற்கு மெஸியாஸ் ஒருவர் கட்டாயமாக எங்கள் மத்தியிலே உதிப்பார் நமது ஆதித்தாய் தகப்பன் சருவேசுரனுடைய கட்டளையை மீறியகாலந் தொட்டு மெஸியாஸ் உற்பவிக்கும் வரையும் இந்த நம்பிக்கை அவர்களிடையே வளர்ந்துவந்தது. ஆதித்தாய் தகப்பன் பாவங்கட்டியபொழுது சருவேசுரன் அவர்களைச் சிங்காரத் தோப்பில் நின்று துரத்தி பசாசைச் சபித்து, "உனக்கும் ஸ்திரிக்கும், அவளுடைய வித்துக்கும் உன்வித்துக்கும் பகையை உண்டாக்குவோம். அவள் உன்னுடைய தலையை நசுக்குவாள்" என்று திருவுளம்பற்றி இருந்தார். சருவேசுரன் மனிதருடைய ஆத்தும இரட்சணியத்திற்காக ஒரு இரட்சகரை அனுப்புவதாக வாக்குறுதி கொடுத்திருந்தார். ஆனால், இந்த இரட்சகரின் கருத்து, காலஞ்செல்லச்செல்ல மனிதருடைய உள்ளங்களிலே ஆத்தும இரட்சகர் ஒரு தேசபக்தராக மாறிவிட்டார். அதாவது: அவர்கள் அவரை ரோமையரின் அடிமையின்கீழ் இருந்து இரட்சிக்கும் ஓர் தலைவராகக் கருதிக்கொண்டார்கள்.

இந்தப் பிழையான நோக்கத்தை மாற்றவும், யூதசனங்களைக் கிறீஸ்துநாதருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்தவும் விரும்பிய சருவேசுரன் இவைகளை நிறைவேற்றும் பொருட்டு இசையாஸ் தீர்க்கதரிசியின் மூலம் "இதோ நான் உமது சமூகத்துக்கு முன்பாக என் தூதனை அனுப்புகிறேன். அவன் உமக்குமுன்னே உமதுவழியை ஆயத்தப்படுத்துவான்" என்றும் வசனித்திருந்தார். அதன்பிரகாரம் அர்ச். ஸ்நாபக அருளப்பரை கிறீஸ்துவின் முன்னோடியாக அனுப்பி இருந்தார். அருளப்பருக்கு சருவேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றும் காலம் ஆரம்பமானதும், ஜோர்தான் நதிக்கரையில் உள்ள நாடுகளுக்குச் சென்று பச்சாத்தாபத்தின் ஞானஸ்நானத்தைப்பற்றிப் பிரசங்கிக்கத் தொடங்கினார். இவருடைய போதனையைக்கேட்ட நல்லமனதும், உயர்ந்தபண்பாடுமுள்ளவர்கள் தங்கள் பாவங்களை வெளிப்படுத்தி ஞானஸ்நானம் பெற்றார்கள்.

ஸ்நாபக அருளப்பருடைய கடுந்தவத்தையும், அவருடைய போதனையினால் அனுபவித்த அபிமானத்தையும், கண்ட யூதருடைய குருக்கள், அருளப்பரிடத்தில் ஆட்களை அனுப்பி, நீர்தானோ கிறீஸ்து என்று கேட்டார்கள். அதற்கு அருளப்பர்: "நான் கிறீஸ்துவல்ல கர்த்தருடைய வழியைச் செவ்வையாக்குங்கள் என்று இசையாஸ் தீர்க்கதரிசி வசனித்தபடியே வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய குரலொலி நானே" என்றார்.

மீளவும் பரிசேயர் அருளப்பரை நோக்கி: "நீர் கிறீஸ்துவுமல்ல, தீர்க்கதரிசியுமல்ல; பின்னே எதற்காக ஞானஸ்நானம் கொடுக்கிறீர்" என்ற கேள்வியைக் கேட்டார்கள். அதற்கு அருளப்பர் அவர்களை நோக்கி: "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், அவரோ உங்களுக்கு ஜலத்தினாலும், இஸ்பிரீத்து சாந்துவினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்" என்றார்.

மேலும் அர்ச். ஸ்நாபக அருளப்பர் கிறீஸ்துநாதருடைய வருகையைக் குறித்து வசனித்ததாவது: எனக்குப் பின்வரவேண்டியவரும், என்னிலும் மேன்மையாக்கப்பட்டவரும் அவரே. அவருடைய பாதரட்சைகளின் வாரைத்தானும் குனிந்து அவிழ்ப்பதற்கு நான் பாத்திரவானல்ல." அருளப்பர் கூறிய வாக்கியத்திலிருந்து தான் கிறீஸ்துவல்ல. கிறீஸ்துவின் இராட்சியத்தை அடைய உதவியாய் இருக்கும் ஒரு ஊன்றுகோல் என்பதை வெளிப்படுத்துகிறார். நம் திவ்விய கர்த்தர் பெத்திலேமில் பிறந்தபொழுது சருவேசுரன் மூன்று இராசாக்களுக்கு வழிகாட்டியாக நட்சேத்திரத்தை அனுப்பியதுபோல கிறீஸ்துநாதருடைய வருகைக்கும் அர்ச். ஸ்நாபக அருளப்பரை ஒரு முன்னோடியாக அனுப்பினார்.

திருச்சபையும் கிறீஸ்தவர்களுடைய உள்ளங்கள் சருவேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பதற்கு வழிநடத்தும் ஒரு ஊன்றுகோலாக அமைந்திருக்கிறது. ஸ்நாபக அருளப்பருடைய சீவியத்திலே ஒரேஒரு நோக்கம்தான் இருந்தது. அதாவது கிறீஸ்துவினுடைய இராச்சியத்திலே பிரவேசிப்பதற்கு யூதசனங்களை ஞானமுறையில் ஆயத்தஞ்செய்தல். திருச்சபையின் ஒரேநோக்கம், அதாவது கிறிஸ்தவர்களுடைய ஆன்மாவைச் சருவேசுரனுடைய சந்நிதானத்தில் சேர்ப்பதற்கு ஆயத்தம்செய்தல். அருளப்பர் சருவேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்றுங்காலம் சமீபித்தபொழுது, "தபஞ்செய்யுங்கள்; ஏனெனில், மோட்ச இராச்சியம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். அவருடைய போதனையைக் கேட்ட யாவரும் தங்கள் பாவங்களை வெளிப்படுத்தி ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆதியிலே நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே கிறீஸ்துவின் வருகையை அறிந்திருந்தார்கள். எனவே இன்று திருச்சபையும் இந்நான்கு வாரங்களையும் எமக்காக ஒதுக்கி கர்த்தரின் பிறப்பை ஆயத்தப்படுத்தும் காலமாக்கியுள்ளது. ஆதலால் நாமும் இந்நாட்களில் தகுந்தஆயத்தங்களுடன் இரட்சகருடைய வருகைக்குத் தயார்செய்வோமாக!

செல்வி ஜி. இராசு
உரும்பிராய்.

### நேர்த்தியின் பூர்த்தி

தயாளமும் சாந்தமுமுள்ள யேசுவின் திருஇருதயநாதரினதும், சதாசகாயம் பொ[illegible]யும் தேவ அன்னையினதும், கோடி அற்புதரான அர்ச். அந்தோனியாரினதும், நன்மரணப் பாதுகாவலரான அர்ச். சூசையப்பரினதும் கீழைத்தேசப் பாதுகாவலரான அர்ச். சவே[illegible]யாரினதும் மன்றாட்டினால் யான் கேட்ட காரியம் நனிசித்தி அடையப்பெற்றதால் நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கப் பிந்தியமைக்காக மன்னிப்புக் கோருகிறேன்.

எம். ஜே. சோசை
வங்காலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கும்ரூன்' கூறும் கதையென்ன?


[1947-ல் அகில உலகத்தையே ஆச்சரியத்துக்குள்ளாக்கியது தேடுவாரற்ற 'கும்ரூன்' பாலைவனம். இங்கு காணப்பட்ட சாக்கடற் சுருள்களும், புதை பொருட்களும் அறிவுலகத்திற்கும், புதைபொருளாராய்ச் யுலகத்திற்கும் முன்னேற்றத்தைக் கொண்டுவந்தது மட்டுமல்லாமல் வேதாகமத்தின் சில ஆராய்ச்சித் துறைகளுக்கும் வெளிச்சத்தைக் கொடுத்துள்ளது.]

பலஸ்தீனா நாட்டின் பாரிய மலைக் குன்றுகளையடுத்துள்ளது பரந்த சாக்கடல். இச்சாக்கடலினருகேயுள்ள பாலைவனத்தினூடாகத் தம் மந்தைகளைக் கடத்திச் செல்வர் இடையர்கள். அசாத்தியமான உப்புக்காற்று வீசும் இச்சாக்கடலினருகே இவ்விடையர்களைத்தவிர வேறொருவரும் செல்வது வழக்கமில்லை.

அன்றொருநாள் முகமது என்னும் இடைப்பையன் இப்பாலைவனத்தினூடாக மந்தைகளைக் கடத்திச் சென்றான். அப்பொழுது ஓர் ஆடு தவறிப் பொந்தொன்றில் விழவே, அப்பொந்திற்குள் கல்லொன்றை எடுத்து வீசினான். அவன் வீசிய கல் அப்பொந்திற்சென்று ஒருசத்தத்தை உண்டாக்கியது. பயங்கொண்ட முகமது அவ்விடத்தைவிட்டு ஓட்டம் பிடித்தான். ஆனால், அச்சத்தம் எப்படி வந்திருக்க முடியும் என்றறிய ஆவற்பட்ட முகமது இன்னொரு தடவை தனது நண்பனொருவனுடன் வந்து அப்பொந்தைப் பார்வையிடவே அங்கு மூடப்பட்ட சாடிகளும், அச்சாடிகளுக்குள் சீலையாற்சுற்றப்பட்ட சுருள்களும் காணப்பட்டன. இச்சுருள்களின் மதிப்பையறியாத முகமதுவும், அவனின் நண்பனும இவைகளை எடுத்துச் சந்தையிலே கொண்டுபோய் விற்றனர். ஆனால் கி. மு. 200-ம் ஆண்டுவரையிலே எழுதப்பட்ட இச்சாக்கடற் சுருள்கள் பற்றியசெய்தி உலகத்திற்கு விரைவில் எட்டியது. எனவே ஆராய்ச்சியாளர்கள் பலர் இவைகளை விலைகொடுத்து வாங்கி இச்சுருள்களையும் இவைகள் கூறும் சரித்திரத்தையும்பற்றி ஆராய்ச்சி நடாத்தினர்.

கி. மு. 538-ம் ஆண்டு. இவ்வாண்டில்தான் பபிலோனியாவின் அடிமைத்தனத்தினின்று இஸ்ருயேல் மக்கள் தமது சொந்த ஊராகிய ஜெருசலேமுக்குத் திரும்பிவந்தார்கள். ஆனால், பொந்துதவறிச் சந்தில்விழுந்தது போன்று இங்கும் அவர்களைக் கஷ்டகாலம் எதிர்நோக்கியிருந்தது. கிரேக்க தேசம் தொட்டு இந்தியாவரையும் மக்கள் ஒரே இனமாக மாறவேண்டும், ஒரே பாஷையைப் பேசவேண்டும் என்று பேராசைப்பட்டான் கிரேக்க தேசஅரசன் அலெக்சாந்தர். அதைத் தொடர்ந்து யூதேயாவை ஆண்டுவந்த அன்ரியோக்கஸ் எபிபானெஸ் என்பவனும் அதே குறிக்கோளைத் தலைமேற்கொண்டு எல்லாமக்களையும் சரிசமனாக்க முயற்சித்தான். ஆனால், இத்தகைய குறிக்கோளை நடைமுறையிலே கொண்டு வருவதற்கு, இஸ்ருயேல் சனத்தின் மதத்தையும், சட்டங்களையும், தேவாலயத்தையும், ஆராதனை முறைகளையும் ஒழித்துக்கட்ட வேண்டும். எனவே, அன்ரியோக்கஸ் இஸ்ருயேல் மக்கள் தொழுதுவந்த அரியபழக்க வழக்கங்களை மிகவும் கொடூரமான முறையிலே அழித்தான். ஜெருசலேம் தேவாலயத்தை அவசங்கைப்படுத்தினான். இந்தக் கொடுங்கோண்மையைத் தாங்கமாட்டாது மக்காபே சகோதரர்கள் தம்மை எகிப்தின் அடிமைத்தனத்தினின்று மீட்ட கடவுளின் உதவியுடன் அன்ரியோக்கசிற்கெதிராகப் போர்தொடுத்தனர். ஆனால், இன்னுமொரு பக்திமிகுந்த இஸ்ருயேல் கூட்டத்தினர், ஜெருசலேமும் அதன் மக்களும் தம்கடவுளை மறப்பதை உணர்ந்தனர். வெளிச்சத்தின் மக்கள் இருளின் மக்களாற் மாறுவதை எண்ண அவர்களாக சகிக்கமுடியவில்லை. அன்று தொட்டு அனுசரிக்கப்பட்ட சட்டங்கள் யாவும் இன்று சுக்குநூறாகச் சிதறடிக்கப் படுவதைக்கண்ட இப்பக்திமான்கள் கடவுளின்சாபம் என்றும்போல ஜெருசலேம்மீதும், அதன் மக்களின்மீதும் வரப்போகின்றதேயென்று சஞ்சலப்பட்டார்கள். தாங்கள் செய்த குற்றத்திற்காகப் பபிலோனியருக்குத் தம்மை அடிமைப்படுத்திய கடவுள் இன்றும் இக்கொடுமைத் தனத்திற்குத் தக்க சாபம் இடப்போகிறாரென்று பயந்தார்கள்.

இருந்தபோதிலும் அவர்கள் உள்ளத்திலே ஒரு நம்பிக்கைத்தொனி காணப்பட்டது. "தங்களின் மூதாதையோரையெல்லாம் அன்னிய அரசர்கள் வதைத்தபோது நீதிநிலைநாட்ட எழுந்த தீர்க்கதரிசிகள் யாபேரும் 'மெசையா' ஒருவருடைய வருகையைப்பற்றிக் கூறிச் சென்றார்களே, இந்த அன்ரியோக்கசின் அட்டகாசத்தையடக்க அதே மெசாயா வரமாட்டாரோ" என்று எண்ணினார்கள். இந்த இருளின் மக்களெல்லாம் மறையவேண்டும். மெசாயாவின் இராட்சியம் வரவேண்டும். ஆனால், அதுவரை இப்பாவத்தின் சந்ததியுடன் இருக்கக் கூடாதென உணர்ந்த இவ்வொளியின் மக்கள் தம் வீடுவாசல் யாவற்றையும் விட்டு யாரும் தேடாக் 'கும்ரூன்' வனத்திற்கு ஓடிச்சென்றனர். அனல கொட்டும் அந்த வனத்திலே இவ்வொளியின்மக்கள் ஒருகுடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் அரியவாழ்க்கை வரலாற்றைப்பற்றி முதலாம் நூற்றாண்டிலே வசித்த யோசேபுஸ், பீலோ ஆகிய சரித்திர ஆசிரியர்கள் சிறிது எழுதியிருந்தபோதிலும், இம்மக்களும், அவர்களின் உன்னத குறிக்கோளைக் கொண்ட வாழ்க்கையும துலக்கமற்றதோர் கட்டுக்கதை போன்றுதான் இருந்தது.



ஆனால், கடந்த சில ஆண்டுகளிலே இக்கும்ரூன் பாலைவனத்திலே புதைபொருளாராய்ச்சி அடைந்த மகத்தான வெற்றி இவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் எமக்கு நன்கு துலக்கியுள்ளது. பாவம் தலைவிரித்தாடும் அன்ரியோக்கசின் இராச்சியத்தைத் துறந்து, எதிர்வாவிருக்கும் மெசையாவின் வழியை ஆயத்தம் பண்ணவென்று 'கும்ரூன்' புகுந்த இம்மக்கள் தாமேதான் ஒளியின் மக்களென்று கருதிக்கொண்டார்கள். மனைவிமக்களைத் துறந்து தனிமையிலே பரிசுத்த வேதாகமத்தைப் படித்துத் தேவனைத் தியானிக்கவென்று இவ்வனத்திற்குச் சென்ற இவர்கள் தமக்கென்று எதுவையும் வைத்துக்கொள்ளவில்லை. தாமிருக்கும் மடத்தைவிட்டு வெளிச்செல்லாத இக்கும்ரூன் சந்ததியினரின் பிரதான தொழில் தோட்ட வேலையும், பரிசுத்த வேதாகமத்தைப் படிப்பதுமேதான். கும்ரூன் குகைகளிற் காணப்பட்ட சுருள்களிற்பல பரிசுத்த வேதாகமத்தையும அதைப் பற்றிய குறிப்புகளையும கொண்டனவாயிருக்கின்றன. இச்சாக்கடற் சுருள்கள் ஒன்றிலே அவர்களது வாழ்க்கைச் சட்டங்கள் விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன. இதன்படி இவர்கள் உண்ணும்பொழுதும் இன்னும் ஒரு நாளிற் பலதடவைகளிலும் மௌனமகாக்க வேண்டும். மௌனம் காப்பது மிகவும் முக்கியமான சட்டங்களில் ஒன்று. இன்னும் வரவிருக்கும நீதியின் போதகரையும், (Teacher of Righteousness) அவரின் இராட்சியத்தையும் பற்றித் தியானிக்கவென்று கும்ரூன் மடத்தைச் சேரவிரும்புவர்கள் யாவரும் இம்மடத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள். சேரவிரும்பும் ஒவ்வொருவருக்கும் ஒரு வருடம் பயிற்சிகாலமாக இருக்கும். இப்பயிற்சிகாலத்தில் இவர் தகுதியுள்ளவர் என்று காணப்பட்டால்தான் ஒரு அங்கத்தவராகச் சேர்க்கப்படுவார். இங்கு சேருபவர்கள் பிரமச்சாரிகளாகவேயிருக்க வேண்டியதாக இருந்தது என்று சிலர் நினைக்கின்றனர்.

இப்படியாக அன்பிலும், பக்தியிலும, தபத்திலும் சீவித்த இம்மக்கள் கிறீஸ்து பிறந்த பின்னும் சீவித்தார்கள். ஆனால், பலஸ்தீனநாடு கி. பி. 132-ம் ஆண்டில் உரோமரின் ஆளுகைக்குள் அடங்கியபோது கும்ரூன் வனத்து மக்களின் மடங்கள் யாவும் தரைமட்டமாக்கப்பட்டன. ஆபத்தை எதிர்கண்ட இவ்வொளியின் மக்கள் தாம் பெரிதென்று மதித்த சில பொருட்களையும், வேதாகமச் சுருள்களையும் சாடிகளிலே இட்டுக் கும்ரூன் குகைகளிலே ஒளித்து வைத்துவிட்டு எங்கேயோ ஓடிச்சென்றனர். ஆனால், இடைப்பையன் முகமதுவுடன் தொடங்கிய கண்டுபிடிப்பு; குரவர்கள் டிவோ, மிலிக், காட்னின் பெனுவா, பறாஸ், கார்மினக் ஆகியோரின் அயராத ஆராய்ச்சிகளினால் இம்மக்களைப்பற்றி எமக்குத் தெரிய வைத்தது மட்டுமல்லாமல், சில வேதாகமஆராய்ச்சித் துறைகளுக்கும் வெளிச்சத்தைக் கொடுத்துள்ளது.

ச. ஜீதபொன்கலன்

## மேற்றிராசனச் செய்திகள்

### சுன்னாகம்

சென்றமாதம் 29-ந்தேதி வியாழக்கிழமை சுன்னாகம் ஸ்ரீமான் கத்தோலிக்கபாடசாலை வருடாந்தவிளையாட்டுப் போட்டிமேற்படிபாடசாலைவிளையாட்டு மைதானத்தில் அந்தோனியார் இல்லத்துக்கும் எமிலியானுஸ் இல்லத்துக்கும் இடையே நடைபெற்றது. போட்டியில் எமிலியானுஸ் இல்லம் வெற்றியீட்டியது.

விளையாட்டுப்போட்டிக்குத் தலைமை தாங்கிய வண. கொன்ஸ்ரன்ரைன் சுவாமியார் (பேசுகையில்: பாடசாலையில் ஒரு மாணவன் எவ்வளவு உண்மையும், ஒழுக்கமும், உயர்ந்த நோக்கமும்கொண்ட குணசீலனாக வாழுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனது எதிர்காலமும் மிக உன்னதநிலை அடையும் என்று குறிப்பிட்டார்.

பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. நீ. இராஜேந்திரம் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில்: இன்று நடைபெற்ற விளையாட்டுப்போட்டி பாடசாலைச் சரித்திரத்திலேயே மறக்க முடியாத சம்பவமாகிவிட்டது என்று குறிப்பிட்டார்.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வண. சுவாமியாரால்பரிசில்கள் வழங்கப்பெற்றன. முடிவில் தேநீர் விருந்து உபசாரணையும் நடைபெற்றது.

— நிருபர்

### தாண்டவன்வெளி

இப்பங்கு வாலிபப்பெண்களின் ஞான வளர்ச்சிக்காக நீடியகாலமாய் நடாத்தப்பட்டுவரும் பரி. மாசில்லாமாதா பத்திச்சபைக் கன்னியர்கள் தங்கள் திருநாளையும், வருடாந்த பொதுக்கூட்டத்தையும் கடந்தசனிவாரம் தேவதாயின் அமலோற்பவத் திருநாளன்று நடாத்தினர். திருநாள்தினம் இப்பங்குச்சிறுவர்கட்கு முதல் சற்பிரசாதமும் வழங்கப்பட்டது

பூசைமுடிவில் பத்திச்சபையினரின் வருடாந்த பொதுக்கூட்டம் கட்டளைக்குரவரின் தலைமையில் நடைபெற்றது. காரியதரிசியின் வருடாந்தஅறிக்கை, தனாதிகாரியின் கணக்கறிக்கைகள் வாசிக்கப்பட்டு அங்கீகாரம்பெற்றது. பின் பத்திச்சபையினரால் ஏகமனதாய்ச் செல்வி செல்வராணி லூயிஸ், புதுவருடத் தலைவியாகவும், செல்வி வசந்தராணி தம்பிமுத்து உபதலைவியாகவும், செல்வி அன்னம்மா ஞானப்பிரகாசம் காரியதரிசியாகவும, செல்வி வசந்தா அந்தோனிப்பிள்ளை உதவிக்காரியதரிசியாகவும், தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஈற்றில் சபையின் போஷகர் வண. கட்டளைக்குரவரால் அனைவருக்கும் கடந்தவருடச்சேவைகட்கு நன்றிபாராட்டப்பட்டதும் கூட்டம் இனிதேமுற்றுப்பெற்றது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### மார்கழி

| | | | |
|---|---|---|---|
| 16 | ஞா. | ஆகமனகாலத்தின் 3-ம் ஞாயிறு (வி. ம.) | [ஊ] |
| 17 | தி. | காலதினம் | [ஊ] |
| 18 | செ. | காலதினம் | [ஊ] |
| 19 | பு. | சதுர்காலப் புதன் | [ஊ] |
| 20 | வி. | காலதினம் | [ஊ] |
| 21 | வெ. | அர்ச். தோமையார் (சதுர்கால வெள்ளி) (வி. ம.) | [சி] |
| 22 | ச. | சதுர்காலச் சனி | [ஊ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1962-ம் ஆண்டு மார்கழிமாதம் 15-ந் திகதி


## எங்கள் உரிமைகள்

உலகநாடுகளில் பொது அரசு என அழைக்கப்படுவது ஐக்கிய நாடுகள்சபை. இரண்டாவது உலகப் பெரும் சமரின் பின்னர், உலக நாடுகளிடையே உண்டாகும் பிரச்சனைகளைக் கலந்துபேசிச் சமரசம் செய்துவைக்கும் உயரிய இலட்சியத்துடன் உருவாக்கப்பட்டது அந்தச்சபை.

இவ்வுலகில் மனிதாவதாரம் எடுக்கும் ஒவ்வொருவனுக்கும் உரிமைகள் சில உண்டு. அவனது பிறப்புரிமை காரணமாக இவ்வுலகில் வழங்கப்படவேண்டிய, அவன் அனுபவிக்கக்கூடிய உரிமைகள் என்ன என்பதைத் தீர்மானிக்க ஐ. நா. சபையின் முதற் கூட்டத் தொடரிலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டது. உலக அமைதிக்காக அருந்தொண்டாற்றி அண்மையில் இயற்கையெய்திய ஸ்ரீமதி எலினூர் ரூஸ்வெல்ட் அம்மையாரின் தலைமையில் மனித உரிமைகளை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டது.

மனிதனின் உரிமைகள் கடந்த காலத்தில் வல்லரசுகளால், சர்வாதிகாரிகளால் அல்லது கொடுங்கோலரசர்களால் தம்மிஷ்டம் போலக் கையாளப்பட்டிருக்கின்றன என்பதை இக்குழு கண்டறிந்தது. உலகின் எப்பகுதியில் வசிப்பவரானாலும் சரி, சாதி மத நிற பேதமின்றி அனைவருக்கும் மனித உரிமைகள் பாரபட்சமின்றி வழங்கப்படுதல் வேண்டுமென இக்குழு தீர்மானித்தது.

மனிதனின் உரிமைகள் யாவை என்பதை அடுத்து இக்குழுவினர் ஆராய்ந்தனர். 1941-ல் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அவர்கள் தம் நாட்டில் நாலுஅம்ச உரிமைத்திட்டமொன்றைப் பிரகடனம் செய்திருந்தார். வழிபாட்டுச் சுதந்திரம், பேச்சுச்சுதந்திரம், அச்சமற்ற வாழ்க்கைச் சுதந்திரம், பொருளாதாரச் சுதந்திரம் என்பவை அவை. இந்த அம்சங்களின் அடிப்படையில் உரிமைகள் நிர்மாணக் குழுவினர் மனிதகுலத்தின் முக்கிய தேவைகளைக் குறிக்கோளாகக் கொண்டு மனித உரிமைகளை வகுத்தனர்.

1948-ம் ஆண்டு மார்கழித்திங்கள் பத்தாம்நாள். ஐ. நா. பொதுச் சபையின் மூன்றாவது பொதுப்பேரவை இக்குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்ட உரிமைகளை ஆராய்ந்து ஏகமனதாக அங்கீகரித்தது. ஐ. நா. சபையின் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் இவ்வுரிமைகளை மதித்து, தத்தம் நாடுகளில மக்கள் அவற்றை அனுபவிப்பதற்குப் பொறுப்புள்ளவர்களா யிருத்தல்வேண்டும். அந்நாடுகளில் எப்பிரசைகட்காவது தனிப்பட்ட முறையிலோ அன்றி ஒரு சமூகமாகவோ இவ்வுரிமைகளிலொன்றாவது மறுக்கப்படுவதை ஆட்சியாளர் தவிர்த்தல் வேண்டும் என்றெல்லாம் மனித உரிமைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டது.

ஆண்டுக்கொருமுறை ஒவ்வொரு தேசத்திலும் மனித உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்ட தினம் அல்லது அவ்வாரம் மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. முக்கிய பிரமுகர்கள் உரை நிகழ்த்துதல், பொதுமக்களும் கலந்துகொள்ளும் வைபவங்கள் என்றெல்லாம் இத்தினம் அமர்க்களப்படுத்தப்படுகின்றது. ஆயின், எல்லாத் தேசங்களும் இந்த உரிமைகளைத் தங்கள் பிரசைகட்கு வழங்கியிருக்கின்றனவா?

வழிபாட்டுச் சுதந்திரம் தந்திருக்கிறார்களா? தம்சொந்தமொழியில் கருமமாற்ற மககட்கு வசதிகள் உண்டா? போதிய ஊண், உடை, இல்லிட வசதிகள் மக்களுக்கு உண்டா? பேச்சு எழுத்து சுதந்திரம் நிலவுகிறதா? பத்திரிகைகள் அரசாங்க தலையீடின்றி ...ம்போல நடாத்தப்படுகின்றனவா? தனிமனிதனின் சுதந்திரம் ...துகாக்கப்படுகிறதா? சாதி, மத, நிற பேதங்கள் அச்சுதந்திரத்துக்கு இடையூறாக உள்ளனவா என ஒவ்வொரு தேசத்திலும் ஆராய்ந்தால் பல பயங்கர விடைகள் முளைக்..க்கூடும்.

ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொ.. தேசங்களினதும் ஆட்சியாளர்கள் சிந்திக்கவேண்டிய பிரச்சனைகள் இவை. தனிமனிதர்கள் ஒவ்வொருவரும்கூட அயலவனின் உரிமைகளை மதிக்க வேண்டியகாலம் இது.

எம்மைப்போலவே அயலவரையும் நினைத்து அவர்களின் உரிமைகட்கு மதிப்புத் தருவோம். அப்போது ஆட்சியாளரும் நமது உரிமைகட்கு மதிப்புத் தருவர். தன் நாட்டில் குடிகளின் உரிமைகட்கு மதிப்புத்தரும் அரசாங்கம் வெளிநாட்டு அரசுகட்கும் மதிப்புத்தரும். அதுவே, உலகில் இன்று நாம்காணும் பூசல்கள் அனைத்தும் மறைந்துவிடக்கூடியதோர் மகிழ்ச்சிகரமான நிலை உருவாகும்.

## இருளில் ஒளி

### (38)

திருமதி லூயிசி நீலி எழுதுவது :-

உயர்தரக் கல்லூரியில் கற்கும் எனது புதல்வனிடமிருந்து வந்த லிகிதம் என்னைத் துயரிலாழ்த்திவிட்டது. பரீட்சையில் தோல்வி, மோட்டார் விபத்து, சிறையிலடைபடுதல் போன்ற செய்தியெதுவும் எனது புதல்வனிடமிருந்து கிடைத்தால்கூட பொறுத்துக் கொள்வேன். தான் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்துகொள்ளப் போவதாக எழுதியதை எப்படிச் சகித்துக்கொள்ள இயலும்? ஏனெனில், எனது சபையில் யான் ஆழ்ந்த மரியாதை கொண்டிருந்தேன்.

கிறிஸ்மஸ் விடுமுறைகட்காக எனது செல்வன் எங்கள் இல்லத்துக்கு வந்துசேர்ந்தான். எனது மனதில் அடங்கியிருந்த ஆத்திரமனைத்தும், புயலாய் மாறியது. எரிமலையாய் அள்ளிவீசியது. புதல்வன் என்னைப்பார்த்துப் புன்னகை செய்தான். அன்னையே உங்கள் மனதை வருத்த யான் ஒருபோதும் விரும்பமாட்டேன்; கத்தோலிக்க மதத்துக்கு எதிராகத் தாங்கள் கொண்டிருக்கும் கொள்கைகளை யானறிவேன். ஆயினும் எனது மதமாற்றம் அவசியமானதொன்று எனப் பதிலளித்தான் அவன்.

விடுமுறை கழிந்ததும் பாடசாலைக்குத் திரும்பிய எனது புதல்வன் தனது ஞானோபதேசப் புத்தகத்தை ஞாபகமறதியாக இல்லத்தில் விட்டுச் சென்றுவிட்டான். அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அந்தப்புத்தகத்தை நன்கு படித்து கத்தோலிக்கத்தின் தவறான கொள்கைகள் படிப்பனைகள் அனைத்தையும் எனது புதல்வனுக்கு எடுத்துக் காட்ட ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என எண்ணிக்கொண்டேன். ஆயினும் அப்புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியபின் அதில் கொடுக்கப்பட்ட விபரங்களனைத்தும் உண்மையானவை, வேதசத்தியங்கள், பிரமாணங்கள் அனைத்தும் தவறு அற்றவை என்ற அபிப்பிராயமே மேலோங்கியது.

இதைக்கண்ட எனது புதல்வி எனக்கு உதவிசெய்யுமுகமாக தானும் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தாள். அப்புத்தகத்திலுள்ள தவறுகளைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக யான் கொண்டிருந்த அபிப்பிராயமே சரியானதுஎன்ற முடிவுக்கு அவளும் வந்தாள்.

வேறு கத்தோலிக்க பிரசுரங்களையும் நாம் விலைக்குப்பெற்று அவைகளில் தவறுகளைக்கண்டுபிடிக்க முற்பட்டோம். இவ்விதம் யாம் சேர்த்த கத்தோலிக்க நூல்கள் ஒரு நூல்நிலையத்தைத் தொடங்குவ்தற்குப் போதுமானவை. ஆயினும் தவறுகள் புறப்படுவதற்குப் பதிலாக எங்கள் கத்தோலிக்க அறிவே விர்த்தியாகியது. எனவே இருவருமாக ஒரு கத்தோலிக்க குரவரிடம் சென்று கத்தோலிக்கரல்லாதோருக்காக அவர் நடாத்தும் ஞானோபதேச வகுப்பில் எங்களையும் பதிவுசெய்து கொண்டோம்.

ஆனால், எனது புதல்வனின் முகத்தில் எப்படி விழிப்பேன்? ஒரு காலத்தில் கத்தோலிக்கம் தவறான கொள்கைகளையுடையது என அவனுடன் வாதித்தவளல்லவா. எனினும் எனது புதல்வன் இதையறியவந்தபோது மகிழ்ச்சியடைந்தான். அன்னையே யான் பல மதங்களின் கொள்கைகளையும் கற்றவன். ஈற்றில் கத்தோலிக்கமே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தவன். நீங்கள் சிறுவயதிலிருந்தே உண்மை வழியில் செல்லவேண்டுமெனப் போதித்துள்ளீர்கள். கத்தோலிக்கமே உண்மையான மார்க்கம் எனக்கூறினான்.

ஆம். உண்மையான மார்க்கத்தில் செல்ல விரும்பியவள் இப்போதுதான் உண்மையான மார்க்கத்தைக் கண்டடைந்தேன். எனது புதல்வன் திருமறையில் இணைந்த மூன்று மாதங்களின் பின்னர் எனது புதல்வியுடனும், இருபேத்திகளுடனும் சேர்ந்து ஞானமுழுக்குப்பெற்று உண்மையொளி அடைந்தவளானேன்.

—சா. பெ.

## காப்பிக்கடையைப் புகழ்கின்றார்
## லூதரன் பேராசிரியர்

வத்திக்கான் சங்கத்தின்போது தாகசாந்தி செய்துகொள்வதற்காக இராயப்பர் மகாலயத்தில் காப்பிப்பான நிலையமொன்று இயங்குகிறதல்லவா? வத்திக்கான் சங்கத்தின் சரித்திரம் எழுதப்படும்போது இந்தநிலையத்துக்குச் சரித்திர ஆசிரியர்கள் அதிக மதிப்புத் தருவார்கள் என லூதரன் சபைப்பேராசிரியர் ஒஸ்கார் குல்மன் குறிப்பிட்டிருக்கிறார். இவர் லூதரன் சபையின் சார்பில் அவதானியாக வத்திக்கான் சங்கத்தில் கலந்துகொள்கிறார்.

இந்தநிலையம் இல்லாவிடில் சங்கத்தின் வேலைகள் சுறுசுறுப்புடனும், திறமையாகவும் இயங்க மாட்டாது. தாகமும் களைப்பும் உண்டானவுடனெல்லாம் இந்த நிலையத்துக்குப் பொதுச்சங்க ஆயர்களும், அவதானிகளான என் போன்றவர்களும் செல்கின்றனர். அங்கு தரப்படும் மதுரமான வாசனைநிரம்பிய காப்பி சோர்வைப்போக்கி உற்சாகத்துடன் புதுமனிதராக எம்மை மீண்டும் சங்கத்துக்கு அனுப்புகிறது என இவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார் ஆயத்தம்

மண்ணகமும் விண்ணகமும் மகிழ்ந்துபாடும்
மாபரனார் திருச்சுதனின் வருகை எண்ணி
பண்ணெடுத்துப் பாட்டிசைப்பர் பலபேர் சேர்ந்து
பாங்கான உடையணியப் பார்ப்பார் அந்நாள்
விண்ணதிர வெடிசுடுவர் சிறுவர் கூடி
விரைந்திடுவர் தமது சுற்றார் வீடுநோக்கி
எண்ணமெல்லாம் நத்தாரின் சிறப்பில் ஏற்றி
இனிமைமிகு உணவுவகை வகையாய்ச் செய்வர்.

●

அலங்கரிப்பர் தம்இல்லம் அது போதாது
ஆடையணி தடல்புடலாய் இருந்தும்என்ன?
தடங்கலில்லா வெளிப்பகட்டு அனைத்தினுள்ளும்
தக்கபடி நத்தாரின் முழுச்சிறப்பும் இல்லை.
சிரம்பணிந்து தேவதேவன் பாதம் அண்டிச்
செய்தபிழைக் குருகிஆன்ம சுத்தம்பெற்று
வணங்கிடுவோம் மனம் மகிழ்ந்து கூடிப்பாடி
வல்லசுதன் திருத்தாளை வாழ்த்திப்போற்றி,

ஆசிரியர்: ச. அமிர்தநாதர்.

## யுனிவர்ஸ்சஞ்சிகையின் நத்தார்ப் பார்சல்கள்

பெரிய பிரித்தானியாவிலும் மற்றும் உலகின் பல பாகங்களிலும் தொண்டாற்றும் கத்தோலிக்க குரவர்களில் பலர் நல்ல வசதியற்ற விசாரணைப் பங்குகளில் தொண்டாற்றுகிறார்கள் அல்லவா? நத்தால் கொண்டாட்டங்களின்போது கிறிஸ்மஸ் கேக் பலகாரங்களை அருந்தவோ, அல்லது வேறுவிதமான கிறிஸ்மஸ் கேளிக்கைகளில் பங்குபெறவோ இக்குருமாரின் நிதிநிலைமை இடந்தராது. அப்படியான நிலையில் உள்ள குருமாரின் கிறிஸ்மஸ் தினம் ஓரளவு இருளடர்ந்தே இருக்கும்.

இங்கிலாந்திலிருந்து வெளியாகும் யுனிவர்ஸ் சஞ்சிகை இப்படிப்பட்ட பரிதாப நிலையிலுள்ள குருமாரின் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களைக் களிப்பூட்டும் வகையில் சில ஆண்டுகட்குமுன்னர் ஒரு திட்டத்தை இயற்றியது. ஒவ்வொருவருடமும் அத்திட்டம் செயலாற்றப்படுகிறது. முதலில் அப்பத்திரிகை தனது வாசக நேயர்களிடம் இம்முயற்சிக்காகப் பண உதவிகோருகிறது. வாசகர்கள் உவந்தளிக்கும் தொகையுடன் யுனிவர்ஸ் நிர்வாகிகள் அளிக்கும் தொகையும் சேர்க்கப்படும்.

இந்நிதியிலிருந்து குறிப்பிட்ட அளவு கிறிஸ்மஸ் பார்சல்கள் தயாரிக்கப்படும். தனிமையில் சீவியம் நடாத்தும் குரவரைக் களிப்படையச்செய்யும் வகையில் கிறிஸ்மஸ் கேக் உள்பட ஏராளமான பொருட்கள் இப்பார்சலில் வைக்கப்பட்டு அனுப்பப்படும். நத்தால் திருநாளில் அல்லது அதற்கு முந்தியதினத்தில் குருமார் அப்பார்சல்களைப் பெறுவர். இத்தடவை யுனிவர்ஸ் சஞ்சிகை 500 குரவர்கட்குக் கிறிஸ்மஸ் பார்சல்களை அனுப்பவிருக்கிறது.

உலகிலேயே அதிக விநியோகமுள்ள கத்தோலிக்க ஆங்கில வாரப் பத்திரிகையே யுனிவர்ஸ் ஆகும். 102 வருடங்கட்கு முன்னர் இது ஆரம்பிக்கப்பட்டது. ஆறுமாதங்களின் முன்னால் மற்றொரு சிறந்த வாரப் பத்திரிகையான கதலிக் டைம்ஸ் சஞ்சிகையை யுனிவர்ஸ் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இரு பெரிய கத்தோலிக்க வாரச்சஞ்சிகைகள் ஒன்றாக இணைந்தபின் மிகப் பெரியஅளவில் பிரமாதமான திட்டங்களுடன் அவை வெளியாகி வருகின்றன. இப்போது இப்பத்திரிகை யூனிவர்ஸ்சும், கதலிக் டைம்சும் எனவே அழைக்கப்படுகிறது.

செபமாலை செபிக்கும் சேனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
[illegible]

## பேசும் பேனா

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

திபதியும், முன்னாள் ஜனாதிபதிகள் இருவரும் கலந்துகொள்ளும் பாக்கியமும் இந்த அம்மையாருக்குக் கிடைத்தது.

எமது அடுத்த வினா விசுவாசப் பரப்புதற் சபையை ஸ்தாபித்தவர் யார் என்பது. இதற்காய விடைகளை பேசும்பேனா, சத்தியவேத பாதுகாவலன், மேற்றிராசன மாளிகை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 19-12-62 க்குப்பிந்தாது அனுப்பிவைக்கவும்.

**ஒருமணித்தியாலத்தில் உலகைச்சுற்றினர்.**

நோர்வே அரசாங்கத்தின் கல்வி இலாகா பதினேழு பிறநாட்டுத் தூதுவரின் காரியாலயங்களினதும், யுனெஸ்கோ ஸ்தாபனத்தினதும் பேருதவியுடன் அண்மையில் ஒரு கண்காட்சியை ஒழுங்கு செய்தது. கப்பலொன்றில் உலகின் பிரதான நாடுகளிலும் காணக்கூடிய முக்கிய நிகழ்ச்சிகள், கலாசாரம், வரலாறு, பூகோளநிலை, வாழ்க்கைமுறைகள் என்பனவற்றையெல்லாம் பிரதிபலிக்கும் அமசங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. ஒரு மணித்தியாலத்தில் உலகின் பிரதான நாடுகளனைத்தினதும் சிறப்புகளையும், மற்றும் பல்வேறு விஷயங்களையும் பார்வையிடக்கூடியவகையில் இக்கண்காட்சி தயாரிக்கப்பட்டிருந்தது.

நோர்வேயின் பிரதான கரைத்துறைமுகங்களிலெல்லாம் கப்பல் சிலதினங்கள் தரித்தது. பெரியோருமுட்பட பாடசாலைமாணவர்கள் கூட்டம்கூட்டமாகச் சென்று இக்கண்காட்சியில் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## வியாதியின்போது தந்தையின் நகைச்சுவை

அண்மையில் நோயால் வருந்திய பாப்பரசரைச் சில விசேட மருத்துவர்கள் பரிசோதித்தபின் அவர் முன்போல லொறற்றோ, அசிசி முதலிய தூர இடங்கட்குப் பிரயாணம் செய்வதற்கு தேகநிலை இனிமேலும் இடந்தராதெனக் குறிப்பிட்டனர். இந்தச்செய்தி பரிசுத்த தந்தைக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுக்கக் கூடுமென அவர்கள் எண்ணினர். அப்படியானால் நாம் லூர்துபதிக்குச் செல்ல முடியாதா என அவர் புன்னகையுடன் வினவினார். முடியாது என ஒரு மருத்துவ நிபுணர் உறுதியாகக் குறிப்பிட்டார். உடனே ஒரு அதிகாரி ஓடிப்போய் இசைக்கருவியொன்றைக் கொண்டுவந்தார். லூர்தின் கீர்த்திபெற்ற இசைத்தட்டொன்றைப் பொருத்தினார். பாப்பரசர் சில நிமிடங்கள் தம்கண்களை மூடியவண்ணம் இசையை அனுபவித்தார். பேர்காமுவாவுக்கு நாம் வருவதாக வாக்களித்திருந்தோம். அதையும் நிறைவேற்ற இயலாதா என அவர் இசைமுடிந்ததும் வினவினார். அப்போது அவரது பார்வை சோகமாகக் காணப்பட்டது, பேர்காமுவாவில்தான் பாப்பரசரின் பிறந்த கிராமமான சோத்தோ இல் மொன்தே அமைந்துளது.

## ரே. க. கிறிஸ்தவம்—1963

வித்தியாதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ற

### ஞானோபதேச நூல்கள்

| | |
|---|---|
| பாலர் வகுப்பு (அல்லது 1-ம் வகுப்பு) | — பாலர் குறிப்பிடம் |
| 2-ம் வகுப்பு | — முதல்நன்மைக் குறிப்பிடம் |
| 3-ம் வகுப்பு<br>4-ம் வகுப்பு | — சிறுவர் குறிப்பிடம் I-ம், II-ம் பாகம். |
| 5-ம் வகுப்பு | — சின்னக்குறிப்பிடம் I-ம், II-ம் பாகம். |
| 6-ம் வகுப்பு | — பெரிய குறிப்பிடம் I—ம் பாகம் |
| 7-ம் வகுப்பு | — பெரிய குறிப்பிடம் II-ம் பாகம்) |
| 8-ம் வகுப்பு | — பெரிய குறிப்பிடம் I-ம், II-ம், III-ம் பாகம்.<br>கிறிஸ்துநாதர் சீவியசரிதை (சுருக்கம்) |
| க. பொ. த. ப. (சாதாரண) ஆயத்தவகுப்பு | — 1. மாணவர் கிறிஸ்தவ போதகம் I—ம் பாகம்<br>2. அர்ச். மார்க்கு சுவிசேஷம் |
| க. பொ. த. ப. (சாதாரண) வகுப்பு | — அர்ச். மத்தேயு சுவிசேஷம்.<br>மாணவர் கிறிஸ்தவ போதகம் (3 காண்டங்களும்) |
| உ. பா. த. ப. ஆயத்த வகுப்பு | — 1. அப்போஸ்தலருடைய நடபடிகள்<br>2 மூலாதார வேத விளக்கம் (அச்சில்) |
| உ. பா. த. ப. வகுப்பு | — அப்போஸ்தலருடைய நடபடிகள்<br>சத்தியவேத தர்ப்பணம் 1—ம் காண்டம் |

கிடைக்குமிடம்:
அர்ச். சூசைமாமுனிவர் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

## குருவின் மாட்சி

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் நின்று
இணக்கமதை உண்டாக்கும் குருக்கள் சேவை
அருகிவரும் விசுவாசம் அணையாது காத்து
ஆண்டவனின் இராட்சியத்தைப் பரப்பும் அன்றோ.

●

சத்தியத்தின் வழிதவறிச் சாவை நோக்கி
சந்ததமும் பவக்குழியில் மூழ்கி மாயும்
மக்கள்தனை அறவழியில் நடத்திச் சென்று
மாட்சியுறு இறையன்பைக் காட்டி[illegible]ிற்பார்.

●

போதனையால் சாதனையால் பூவிலோர்க்கு
புரியவைப்பார் தம்தொண்டின் புனிதத் தன்மை
வாதனைசெய் தீதகற்றி வாழ வைப்பார்
வைத்தியராம் ஞானத்தின் வலிமை பெற்றோர்.

●

தஞ்சமது க[illegible]ணாதோர் பலபேர் கோடி
தப்பாது கரைசேர்க்கும் தாகம் கொண்டோர்
விஞ்சியது எப்பணிக்கும் குருவின் சேவை
விளங்கிடுவாய் வாலிபனே! அன்னார் மாட்சி.

செல்வி: ச. ராசேஸ்வரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

**அன்புச் சோதரிகளே!**

**கிறிஸ்மஸ்விழா அண்மி வந்துகொண்டிருக்கிறதே. எமது இல்லங்கட்கு வெள்ளையடித்து, அழகுசெய்து எங்கும் மனோகரமாகவைக்க முயன்றுகொண்டிருக்கிறோம். இதேதருணத்தில் பெண்களாகிய நாம் எமது வீட்டிலுள்ள சின்னஞ்சிறுருக்கும் யேசுபாலகனின் வருகையைப்பற்றி கதைகள்சொல்லிக்கொடுத்து, வீட்டில் "கிறிஸ்மஸ் குடில்" அமைத்து அவர்களும் இத்தினத்தை ஆவலோடு எதிர்பார்க்கச் செய்வோம். சிறுசிறு மனவல்லயச் செபங்கள், திவ்விய பாலகன் பிரார்த்தனை முதலியவற்றை வீடுகளில் செபிப்போம். ஆகமன காலத்தின் பொருளை விளக்கி அக்காலத்தை யேசுபாலகனின் வருகைக்கு ஆயத்த நாட்களாகச் செலவழிப்போம். அத்துடன் மகளிர்மன்றம் நடத்தும் கிறிஸ்மஸ் இதழுக்கான கதை, கட்டுரைப்போட்டியிலும் பங்குபற்றி பரிசைத் தட்டிக்கொள்ள முயலுங்கள்.**

**சோதரி ரோஜா.**

## தாயென்ற பெருமைதனை மனங்குளிரத் தரும் மலரே!

அன்புள்ள பிரமீளாவுக்கு!

அஞ்சல்கண்டேன். களிபேருவகை கொண்டேன். இன்னும் ஏழே மாதங்களில் உன்மடியில் உங்கள் குலக்கொழுந்து தவழப்போகும் இனிமையான செய்தியைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறாயேயடி உன்கடிதத்தில். திருமணத்தின் இலட்சியமே மகப்பேறுதான் என்பது வெள்ளிடைமலை. இல்லற நந்தவனத்தில் எழில்மிகு மலர்களான குழந்தைகள்தான் தம்பதிகளைப் பிணைத்துவிடும் பொன் சரடுகளல்லவா? நிற்க! விரைவில் தாயாகப்போகும் நீ கடைப்பிடிக்கவேண்டிய சில விஷயங்களை உனக்கு எடுத்துக் காட்டலாமல்லவா?

தாய்மை இயற்கை, பெண்ணுக்கு விதித்திருக்கும் ஒரு மாபெரும்கடமை. தாய்மையின் பெருமையை உணராத எத்தனையோ தாய்மார் பிரசவவேதனையை முன்னிட்டோ, மற்றும் கஷ்டங்களை மனதிலுன்னியோ கருத்தடை, கருவை அழித்தல் முதலிய மாபெரும் பாதகங்களைக் கட்டிக்கொள்கிறார்கள். உண்மையான கத்தோலிக்க பெண்களோ தாய்மைப்பேற்றைக் கடவுளது பெருங்கொடையாக எண்ணி அதை ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். கர்ப்பிணியான பெண்ணின் உதரத்தில் ஒரு சிசு உற்பவித்த சமயத்திலேயே இறைவன் அதற்கொரு காவற்தூதனை நியமித்து விடுகிறார். அந்நேரந்தொடக்கம் அச்சிசுவுக்கு உதரத்தில் ஏற்படக்கூடிய, பிரசவசமயத்தில் உண்டாகக்கூடிய சகல ஆபத்துக்களிலும் இக்காவற்தூதனே அதைப் பராமரிக்கிறார் என்பதை மனதில் கொள்வாயாக. ஆகவே நீ முதன்முதலில் செய்ய வேண்டியது யாதெனில் உனது உதரத்தில் அசைந்துகொண்டிருக்கும் குழந்தையைக் கடவுளிடமும், அதன் காவற்தூதனிடமும் முழுமையாக ஒப்படைத்துவிடு. அச்சிசுவுக்காகவும், உனது பிரசவ சமயத்தில் உனக்கு உதவும்படியும் இறைவனை அநுதினமும் பிரார்த்தித்து வா.

அடுத்ததாக கர்ப்பிணியான உனது இரத்தத்தில் உருவாகும் குழந்தை உனது குணங்களையே பிற்காலத்தில் கொண்டிருக்கும் என்பதை மறந்துவிடாதே. "தாயைப்போல் பிள்ளை" என்பார்களே கர்ப்பிணியானவள் மனம் அமைதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கவேண்டும். கவலைகளை அறவே ஒளித்துவிடவேண்டும். மற்றப் பெண்களிடம் பொறாமை, புடவை, நகைமுதலியவற்றில் ஆசை, அகந்தை, [illegible]டுப்பு முதலிய துர்க்குணங்களை [illegible]வ ஒழித்துவிட வேண்டும். சிற்[illegible] நூல்கள், பயங்கரமான துப்[illegible]ம் கதைத்தொடர்கள் இவற்றைப் படித்தல் கூடாது. அநேகமாக அர்ச்சிஷ்டவரின் சரிதைகள், ஞானநூல்கள், மற்றும் சமூகக்கதைகள் போன்றவற்றைப் படிப்பதனால் உனது குழந்தையும் தெய்வ பயமும், நற்குணமுமுள்ள பிள்ளையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

மூன்றாவதாக உனது உடல் ஆரோக்கியத்தில் நீ மிகவும் அக்கறை காட்டவேண்டும். இறுக்கமான ஆடைகள், குதியுயர்ந்த சப்பாத்துக்கள், கால் தடக்கும்படியான பாவாடைகள் அணிதலைத் தவிர்க்கவேண்டும். கண்டதையெல்லாம் கண்டநேரமும் உண்ணும் பழக்கத்தைத் தவிர்த்து வேளாவேளையில் போஷாக்குள்ள உணவுகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். பழங்களை விசேடமாகத் தோடம்பழங்களைத் தாராளமாகச் சாப்பிடுவதால் உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட்டு மலச்சிக்கலைத் தவிர்ப்பதுடன் விட்டமின் சத்துக்களையும் கொடுக்கும். காய்கறி, கீரைவகைகளை நிறையச் சேர்த்துக் கொண்டால் கர்ப்பிணிக்கு மிக அவசியமான கல்ஷியம் சத்துக்கிடைக்கும். கொழுப்புப்பொருட்களைத் தவிர்க்கவேண்டும். உள்ளுறுப்புக்களைத் தாக்கக்கூடிய கஷ்டமான வேலைகளைத் தவிர்த்து, சாதாரணமான வீட்டுவேலைகளிலீடுபட்டு தேகப்பயிற்சி செய்யவேண்டும். சொகுசாக வாழும் பெண்மணிகள் பிரசவ சமயத்தில் மிகக் கஷ்டப்படவேண்டி வரும். பாரமான பொருட்களைத் தூக்குதல் ஆகாது.

மேலும் குழந்தை உதரத்தில் உருவாகின்றது என அறிந்த காலத்திலிருந்து வைத்தியரது ஆலோசனையை நாடுதல் சுகப்பிரசவத்துக்கு வழிகோலும். மாதாந்தம் தனது உடல்நிலையைப் பரிசோதித்து உடனுக்குடன் வேண்டியவற்றைச் செய்வது நல்லது. உதாரணமாக மூன்றாவது நான்காவது மாதங்களில் கர்ப்பிணிகள் தலைச்சுற்று, வாந்தி முதலிய சில்லறைத் தொல்லைகளினால் மனங்கலங்கி விடுகிறார்கள். முதலில் கர்ப்பிணிகள் மன உறுதியுடன் இருக்கவேண்டும். எலுமிச்சம்பழச் சாற்றில் சிறிது உப்புப் போட்டு கொஞ்சமாக அருந்திவந்தால் தலைச்சுற்று, வாந்தி உண்டாவது போன்ற உணர்ச்சி நின்றுவிடும்.

அடுத்ததாக குழந்தைக்கும் உனக்கும் பிரசவசமயத்திற்கான உடைகளையும் மற்றும் பொருட்களையும் ஆயத்தப்படுத்திக்கொள். குழந்தையின் உடைகள் மிக மெதுவானதும், காற்றோட்டமுள்ளதுமான மஸ்லின் துணியில் அமைவது நல்லது. இவ்வுடைகள் அதிக வேலைப்பாடற்றனவாகவும் எளிதில் கழுவிப் பாவிக்கக்கூடியதும் உட்பக்கம் தையல் சிலும்பல்களில்லாமல் இருப்பது நல்லது. குழந்தைக்கு அவசியமான பொருட்களின் அட்டவணை இதோ! ......

1. பிள்ளைத்தொட்டிலும் அதற்கு வேண்டிய படுக்கை விரிப்புகள் 4.

2. [illegible]ழகுசீலை 1.

3. சிறு தலையணைகள் 3. இவை மெதுமையான பஞ்சினால், கடுமையாக இல்லாது இருக்க வேண்டும். தலைக்குப் [illegible] அரைவட்ட[illegible]ளுக்கு நீள்சதுரமாக இருத்தலும் நவீன முறையாகும்.

4. தொட்டிலை மூடுவதற்கு மெல்லிய நெற்துணி. நுளம்புகள் அதிகமாயிருப்பின் கொசுவலை.

5. குளிப்பாட்டும் தொட்டி. சற்றுப் பெரிதாயிருந்தால் வளர்ந்தபின்னும் பாவிக்கலாம்.

6. வெஸ்ற் எனப்படும் சேட் 6, உள் உடைகள் 6, மேற்சட்டைகள் 6, இராக்கமிசி 4, பெரியதுவாய் 2, முகத்துவாய் மெல்லியது 3, அரைத்துணிகள் (சதுரவடிவினவை) 2 டசின், சிறிய பிளனல் கம்பளி 2, கம்பளி நூலால் பின்னிய தொப்பி ஒன்றும், மேஸ் ஒருசோடும், (குளிர், காற்றுக் காலங்கட்காக) தொப்பிள் கொடிகட்டும் துணி 2, பழைய துணிகள் சில. இவைகளையெல்லாம் 7-ம் 8-ம் மாதங்களில் தயாராக வைத்திருப்பது நல்லது.

இப்பொழுதெல்லாம் மேலைத்தேசங்களில் அர்ச். ஜெரூட் என்னும் அர்ச்சியசிஷ்டவர் சுகப்பிரசவங்களுக்குப் பாதுகாவலராய் விளங்குகின்றார். அவரது சீவியவரலாறும், நவநாள் செபங்களும் அடங்கிய நூலொன்று அனுப்பிவைக்கிறேன். அவரிடம் அநுதினம் மன்றாடிவா. எனது செபவேளைகளிலும் எனது அருமைத்தோழியாகிய உனக்காக மன்றாடிவருவேன்.

பதில் [illegible]மா?

புனிதா.

# சீர்பெற மாட்டீர்களா?

பாரெங்கும் பரவிக்கொண்டிருந்த இருளின் மத்தியில் விண்ணில் விண்மீன்களும், மதியும் ஒளிவீசிக்கொண்டிருந்தன. அந்த அகாலவேளையில் தன்னந்தனியேகல்லறைமேட்டில் கண்ணீர்ப் பிரலாபத்துடன் காட்சியளித்தாள் மேரி. வேதனைத்தீயால் வெந்துருகிய அந்நங்கையின் புலம்பல் ஒலி கேட்ட கல்லறைக்காவற்காரன் அவளை இல்லமேகும்படி இனிதே பகர்ந்தான். அவள் அதற்கிணங்காது அன்றிரவை அக்கல்லறை மேட்டிலேயே போக்கினாள்.

*  *  *

மலரும் மணமும்போல் மனம்சேர்ந்து உறவாடினர் மேரியும், புஷ்பமும். அவர்களின் தூய அன்பைக்கண்டோர் அனைவரும் வியந்தனர். பாலியபருவ முதல் தினமும் திவ்வியபூசைகண்டு, திவ்விய அன்பர் யேசுவை உள்ளத்தில் உட்கொண்டு அந்திசந்தி அமலன்யேசுவுடன் அன்புரையாடல் நடத்துவதிலும் அலாதிஇன்பம்கொண்ட தோழிகள் இருவரும் தேவ அன்பில் எவ்விதம் வளர்ச்சியடைந்தனர் என்பதை எடுத்துரைக்க அவசியமில்லை. சிறுப்பத்தில் அவர்களிருவரினதும் அகத்தில் அடங்கிய ஆண்டவரின் அன்பு இளமையில் தியாக சேவையாகப் பரிணமித்தது. மேரி எங்கிருப்பாளோ, அங்கே புஷ்பமும் கட்டாயம் காணப்படுவாள். இவ்விதமாகப் பாசத்தில் பரிணமித்த இளநங்கையர் இருவரும் மரியாயின் சேனையில்சேவைபுரியத்தொடங்கினர். சிறு குடிசைகளெங்கும் நுழைந்து அங்குள்ளோரையெல்லாம் தமது மலர்ந்த வதனத்தால், அன்புப் பேச்சால் தம்வசப்படுத்தி அவர்களையெல்லாம் சீர்ப்படுத்தி உத்தம கத்தோலிக்கராக்கினர். அவர்களிருவரினதும் பெருஞ் சேவையைக்கண்ட அவ்வூர் மக்கள் வியப்பும், மகிழ்வும்கொண்டனர். ஆனால்......

அன்றொருநாள் புஷ்பாவும், மேரியும் சேனைஅலுவல்களை முடித்துவிட்டு மகிழ்ச்சியுடன் இல்லம்சென்றுகொண்டிருந்தனர். அண்மையிலிருந்த தன்னில்லத்திற்கு மேரி புஷ்பாவை அழைத்துச்சென்றாள். அங்கே மேரியின் அன்னை, அண்டைவீட்டு அடைக்கலமேரி, புஷ்பாவின் அன்னை இம்மூவரும் காரசாரமான உரையாடலிலீடுபட்டுக் கொண்டிருந்தனர். புஷ்பா, மேரி இருவர்மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அடைக்கலமேரியின் சூழ்ச்சி பலித்தது. இருவரது சிநேகிதத்துக்கும் முற்றுப்புள்ளி இடப்பட்டது. சகோதரிகள் பிரித்து வைக்கப்பட்டனர். ஒன்றுகூடிவாழ்ந்த பறவை இனம் இரண்டு சிறகொடிந்து தனிமையில் தவித்ததுபோல் மேரியும், புஷ்பாவும் தனிமையில் தனித்துயர் அடைந்தனர். அடைத்துவைத்த அன்புமலரான புஷ்பா எத்தனைநாள் தன் மலரின் மணமான மேரியைப்பிரிந்து வாழமுடியும்? எல்லாம் அண்டைவீட்டு அடைக்கலமேரியின் கோளினால் விளைந்தது.

*  *  *

காலம் பறந்தோடியது. பாசத்தின் பிரிவால், மனமொடிந்த புஷ்பாவிற்கு நோயேற்பட்டது. பாயும படுக்கையுமான அவள் சிலநாட்களால் தேவனின் கரங்களில் அன்புத்துயில்கொண்டாள். நண்பியின் மரணச்செய்திகேட்ட மேரி ஓடோடிச்சென்று அவளின் உயிரற்ற உடல்மீது உருண்டு விழுந்தழுதாள். பார்ப்போர் மனதைக் கசிந்துருகவைத்தது அப்பாசச்செயல். அடுத்ததினம் புஷ்பாவின் பிணம் அடக்கம்செய்யப்பட்டது. கல்லறை அடக்கத்திற்குச் சென்றமேரி அங்கேயேதங்கிவிட்டதை யாரும் அவதானிக்கவில்லை. அக்கல்லறையில் தன் தோழியுடன் தான் கழித்த வாழ்நாட்களின் இனியசெய்திகளைச் சொல்லியழுதாள். இருளரக்கன் வந்தும் அவள் அசையவில்லை. அழுகையொலிகேட்ட கல்லறைக்காவற்காரன் அந்நங்கையை வெளியே செல்லும்படி கூறினான். அவள் அதற்கிணங்காது அன்றிரவை அக்கல்லறைமேட்டிலேயே செலவிட்டாள்.

மங்கையரே, மனதில் சிந்தனை செய்ய ஏவிவிடுகின்றதல்லவா இக்கதை. ஆம், ஓய்வுநேரத்தில் அண்டைவீட்டுப்பெண்மணிகளுடன்கூடி அயலவரைப்பற்றிக் குறைகூறித்திரிவதையே தம் தொழிலாகக் கொண்டிருக்கும் பெண்மணிகளின் எண்ணிக்கை பெருகிவருகிறது. பிறரைப்பற்றிக் குறைகூறும் பெண்மணிகளால் விளையும் தீங்குகளோ அனந்தம். கத்தோலிக்க பெண்மணிகள் பலர் ஒன்றுகூடி நம்மறையைப் பரப்பும் தியாகிகளைப்பற்றிப் பிறசமயத்தவர்முன்னிலையில் உரையாடும் அபாண்டமான பேச்சுவார்த்தைகளைத் தவிர்க்க வேண்டியதவசியம். அயலவரைப்பற்றி அநியாயமான கதைகளைக் கயிறுதிரிக்கும் மாதர்களே "தீநாக்கு" என்னும் நூலைப் படித்துப் பாருங்கள். பயங்கர கொலைகளையே உண்டுபண்ணும் சக்தி மாதரின் நாவுக்குண்டென்பதை நலமுடன் நவில்கின்றது அப்புத்தகம். பிறர் குறைகூறுவோருக்கு மறுவுலகில் தண்டனை கொடுக்கக் கர்த்தராகிய கடவுள் கண்ணியமுடன் காத்திருக்கின்றார். இவ்விதம் பிறர்குறைகூறும் பெரும்பான்மைப் பெண்மணிகளின் செயலை அறியாமை என்பதா? அன்றேல் அநியாயம் என்பதா? எதுவானாலும் சரி மங்கையரே எச்சரிக்கையாயிருங்கள்! பிறர் குறைகூறிப் பிறர்சிநேகத்திற்குப் பாதகமபுரியும் பாவையரே "என்னைவிட்டகன்றுபோங்கள்" என மறுவுலகில் யேசுநாதர்கூறி, நித்தியநரகத்திற்கு உங்களைத் துரத்தும்போது அடையும் ஆக்கினையை எண்ணிப் பாருங்கள். வார்த்தைகளால் மற்றையோரின் மனதைக் கொலைபுரியும்தொழிலில் நீங்களுமீடுபட்டிருந்தால் இனியாவது சீர்பெறமாட்டீர்களா? இத்தீயகுணம் நம்மங்கையர் உலகைவிட்டு நீங்க ஓய்வுநேரத்தை அவர்கள் சரியான முறையில் செலவிடப் பழகவேண்டும்.

**ஏ. எல். எம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் யார் யார் அவள் யாரோ!...

"ஆண்டவன் படைத்தான் எங்கிட்டே கொடுத்தான்
அனுபவி "ராஜா"ன்னு அனுப்பி வைத்தான்"

என்று பெருமிதமாக விவாகமான பலவருடங்களின் பின்னும் கணவன் புகழ்ந்துகூறக்கூடியதாக இல்லத்தலைவிக்குரிய **பஞ்சசீலக் கொள்கைகளைக்** கடைப்பிடிக்கும் பெண்மணி......

யார் யார் யார் அவள் யாரோ!

## நல்ல பெண்மணி மிக நல்ல பெண்மணி! ...

தனது மனைவி நற்குண்மும் நற்பண்புகளும் நிறைந்த நிறைகுடமாகத் திகழவேண்டுமென்பது ஒவ்வொரு கணவனதும் எண்ணமாகும். மனையியலில் அவள் சிறந்து விளங்குவதுடன் அவள் உத்தம குணமும், தெய்வபயமும், கத்தோலிக்க பெண்ணுக்குரிய சிறந்த கொள்கைகளையும் உடையவளாக இருக்கவேண்டும். இல்லத்தின் ஆணிவேர் அவளே அவளது நல்லொழுக்கம் ஆட்டம்கண்டால் இவ் இல்லறவாழ்வில் கணவனும் பிள்ளைகளுமே அடியோடு அழிந்துவிடுவார்கள். மனிதன் தான் எவ்வளவு நியதியற்ற குணங்களுடையவனாக இருந்தாலும் அதைப்பற்றி மனங் கவலைப்படமாட்டான். ஆனால் தனது மனைவியும் அதேநிலையில் இருப்பதைக் கண்டாலோ அவன்மனங் கவின்று விரக்திநிலை யடைந்து விடுகிறான். ஆகவே மனைவி **மிகமிக நல்ல பெண்மணியாக** விளங்கவேண்டும்.

## ஆதரவளித்திடும் அணங்கும் நீயே!

ஆண்மை என்பது பெருமிதமும், துணிவும், முன்னேற்ற ஊக்கமும் உடையது. ஆனால் தன்னோடொத்த மற்ற வாலிபச் சினேகிதர்களிடம் அடையமுடியாத ஒரு ஆதாரவையும் பாதுகாவலையும் அவன் நாடுவது உளநூல் தத்துவமானது. துணிவுள்ள ஆனால் நிலையான தீர்மானமற்ற மலையேறும் மனிதர்களைப்போல் அவர்கள் தீவிரமாக முன்னேறுகிறார்கள். ஆனால் பயங்கரமான உச்சியை அண்மும் வேளையில் அவர்கள் உள்ளம் திண்டாடுகிறது. இச்சமயத்தில்தான் மனைவி கைகொடுக்க வேண்டியவளாகிறாள். அவள் விரும்பினால் அவன் மலையுச்சியையடைய உதவலாம். அன்றேல் பாதாளத்தில் அவனைத் தள்ளிவிடலாம். ஆகவே மனைவி கணவன் மனம் மடியும் நேரத்தில் ஆதரவளித்தும், தன்னம்பிக்கை இழக்கும்போது நம்பிக்கையூட்டியும், தாழ்வு மனப்பான்மை கொள்கையில் அவனை உயர்த்திப் பேசியும் கணவனுக்கு உற்ற **ஆதாவுள்ள அணங்காக** வாழவேண்டும்.

## உன் தலைவன் அவனே அவனே!

ஏவாளைப்படைத்த இறைவன் ஆதாமை அவளுக்குத் தலைவனாக நியமித்தார். தேவதாய் பரலோக இராக்கினியாக, இறைவனின் அன்னையாக விளங்கினாலும் தனது பத்தாவாகிய சூசையப்பரையே தனது எஜமானாக மதித்தாள். இன்றைய உலகில் அடிபடும் பேச்சோ "பெண் சமத்துவ உரிமை" என்பதுதான். தான் கணவனிலும் பார்க்க அதிகம் உழைப்பவளாக, அன்றேல் சற்றுக் கூடப் படித்தவளாகவோ இருந்துவிட்டால் அப்பப்பா, இந்தப்பெண்கள் செய்யும் அட்டகாசமோ பெரிது. அன்றேல் சற்று வாயாடிய பெண்ணிடம் ஒரு அப்பாவி ஆண் அகப்பட்டுவிட்டால போதும். தானே எஜமானத்துவபதவியை எடுத்துவிடுகின்றாள். இது வல்ல கத்தோலிக்க பெண்ணின் உரிமை. அவள் உடலால் மட்டுமல்ல ஆனால் தனது உள்ளத்தாலும் அவனைத் தன் தலைவனாக ஏற்று பணிவிடை புரியவேண்டும். கணவனில் குறைகூறல், மற்றப்பெண்களிடம் இகழ்ந்துரைத்தல், எதிர்வார்த்தை பேசுதல், குடும்பவிஷயங்களைக் கலந்தோசிக்காது தன்விருப்பப்படி நடத்தல் இவற்றையெல்லாம் தவிர்க்கவேண்டும். கணவன் ஏழையென்றாலும் மனைவிக்கு ராஜகுமாரன்தான். ஆகவே **தன் தலைவன் அவனே அவனே!** என்ற சிறந்த கொள்கையுடையவளாயிருக்கவேண்டும்.

## எந்தன் மனக்கோயில் உனக்காகவே! ....

விவாகமென்பது உள்ளங்களையும், இதயங்களையும், ஆத்துமங்களையும், உடல்களையும் ஒன்றிக்கும் ஒரு பந்தனம். காதலுக்காகப் போராடி உற்றார், உறவினரையும் எதிர்த்து, காதல் மணம் புரிந்தபெண்கள்கூடக் காலகதியில் கணவன்மேல் தாம்கொண்ட அன்பில் குறைந்துகொண்டே வருகிறார்கள். அன்பு என்பது உள்ளத்திலிருந்து வெளிவருவது. இந்தஅன்பில் ஏற்படும் உறவில் மலரும் மலர்களே குழந்தைகள். இந்த உறவே மெய் விவாகத்தின் அடி அஸ்திவாரமாக விளங்குவது. மனைவி கணவனுக்கு இன்பமளிப்பவளாக வாழவேண்டும். அவளது நியாயமான ஆசைகளை, விருப்பங்களைப் பூர்த்திசெய்யவேண்டும். கணவனே கண்கண்ட தெய்வமல்லவா? அவனைத் தனது மனக்கோயிலில்வைத்துப் பூசிப்பது மனைவியின் கடமை. அன்பினாலேயே இல்லத்திலெழும் எவ்வித சூறாவளியையும் தடைசெய்யவும் முடியும்; இன்பஊற்று பெருகச்செய்யவும் முடியும்.

## அமைதியிலே இனிமை காணவே! ...

ஆண்கள் சற்றுவேளையாவது அமைதியாக இருக்க விரும்புவார்கள். சில பெண்கள் எந்நேரமும் ஏதாவது பேசிக்கொண்டோ, முறுமுறுத்துக் கொண்டோ அவர்கள் அமைதியைக் கெடுத்து, சீற்றத்துக்கு ஆளாவர். காலையில் விடிந்த நேரந்தொடக்கம் கோப்பிக்குச் சீனியில்லை என்ற பல்லவியில் ஆரம்பித்து மதியவேளையில் உப்பில்லை, புளியில்லை என்ற அனுபல்லவியை நீடித்து, மாலையில் அடுத்த வீட்டுக்காரியைப்போல் ஒரு ஆனநகையுண்டா, பட்டுப்புடவையுண்டா, படம் பார்க்க எப்போதாவது கூட்டிப் போனீர்களா? என்ற சரணத்துடன் முடிக்கும் இல்லத்தலைவியுடன் எவன்தான் நிம்மதியாக வாழமுடியும். இவ்வித நச்சரிப்பு எவ்வளவுக்குப் படிப்படியாகக் கூடுகிறதோ அவ்வளவுக்கு கணவனும் மனைவியின் தொடர்பிலிருந்து அகன்றுகொண்டே போகிறான். எனவே பெண்கள் தம்கணவரை அமைதியிலே இனிமைகாண விடவேண்டும்.

மேற்கூறிய பஞ்சசீலக்கொள்கைகளைக் கடைப்பிடித்து நடப்பவள் எவளோ அவளே பத்தாவுக்கேற்ற பதிவிரதையாவாள்.

சிறுகதை

# வாழ்க்கையில் விடிவெள்ளி

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு இன்னும் சில தினங்களே இருந்தன. ஒவ்வோர் இல்லங்களிலும் குதூகலிப்பும், மகிழ்ச்சியும் தாண்டவமாடின. ஆனால், மேரியின் மனதில் எழுந்த புயல்மட்டும் ஓயாது வீசிக்கொண்டே இருந்தது. "இந்தக் கிறிஸ்மஸ் தினத்திலேயாவது தன் கணவன் திருந்திவிடுவான்" என அவள் எதிர்பார்த்த எண்ணம்மட்டும் நாளடைவில் சிதைந்துகொண்டு வந்ததேயொழிய மாற்றம் ஒன்றும் ஏற்படாததுகண்டு மனம் வெதும்பினாள். தேவதாயின் பாதகமலங்களைக் கண்ணீரால் நனைத்தாள். அருள்பொழியும் அன்னையின் பார்வை மட்டும் அவளுக்கு ஆறுதல் ஊட்டிக் கொண்டே இருந்தது.

அலோசியஸ் அப்படியொன்றும் கெட்டவனல்லன். ஆனால், தீராத மதுப்பழக்கத்திற்குமட்டும் அடிமையாக இருந்தான். நல்ல உத்தியோகமும், மற்றும் சகலவசதிகளும் நிறைய இருந்தன. மேரியின் கரங்களைப் பற்றும்போது அப்பழுக்கற்ற நல்லமனிதனாகவே அலோசியஸ் காட்சியளித்தான். கெட்டசகவாசமும், குடிப்பழக்கமும் பின்னால் ஏற்பட்டவையே!

டிசம்பர் 14-ந் தேதி. கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு இன்னும் 10 தினங்களே இருந்தன. நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தாள் மேரி. திடீரென பெருமழை பொழிந்தது. மின்னல் பயங்கரமாக வெட்டியது. மணி நடுநிசி பதினொன்றைத் தாண்டிவிட்டது. சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்தோடியது. சிறிது நேரத்தில் கதவுதட்டப்படும் சப்தம் பலமாகக் கேட்டதும் மேரி எழுந்து கதவைத்திறந்தாள். அலோசியஸ் தடுமாறியபடி உள்ளே வந்தான். வாயில் மதுவின்வாடை வீசியது. குரூரமான அவன் பார்வையைக்கண்டு மேரி நடுங்கினாள். மழை மட்டும் ஓயவேயில்லை. உணவுத் தட்டை முன்னே நீட்டினாள். திறந்திருந்த கதவின் வெளியாக அதனை வீசியெறிந்தான் அவன். மின்னல் வெட்டியது. கதவு தாளிடப்பட்டது. அலோசியசின் கொடூரச் சிரிப்பொலி பயங்கரமாகக்கேட்டது. தொடர்ந்து மேரிக்குவிழுந்த அடிகளின் எதிரொலி கேட்டது. நிறைமாதக்கர்ப்பிணியான மேரி சுருண்டுவிழுந்தாள். மாதாவின் அருட்பார்வைமட்டும் மேரியை விட்டு அகலவில்லை. மழையும் ஓய்ந்தது, நிசப்தம் நிலவியது.

"யாரோ இருவர் அலோசியசை அழைத்துச் சென்றனர். எங்கே செல்கின்றனர்என்றுதெரியாது. அவர்களின் பின்னாடியே அவனும் சென்றுகொண்டிருக்கிறான். திடீரென ஆயிரம் மின்னல்களின் பேரொளி ஒன்று அவன் கண்களை மறைக்கிறது. பயத்துடன் மிரளுகிறான். பிரகாசத்தின்பின்பு, நீதிசெலுத்தும் சர்வேசுரனின் கனிவு ததும்பும் முகம் தென்படுகிறது. "நீ குடிவெறியால் அர்த்தராத்திரியில் உன் நிறைமாதக்கர்ப்பிணியான மனைவியையும், அவளின் வயிற்றிலே இருந்த சிசுவையும் வாதைப்படுத்தினாய். உனக்கு விதிக்கப்பட்ட இடம் அப்பால் இருக்கிறது; என் முன்னின்று அகன்றுபோ! ஊழியுள்ள காலம்மட்டும் வேதனைத்தீயிலே வெந்து வெந்து மாளுவாய்." இருசங்கிலிகள் அலோசியசின் கைகளிலே மாட்டப்படுகிறது. பயங்கரமான தோற்றமுடைய மனிதர்களின் மத்தியிலே நடக்கிறான். சுழன்றுபாயும் நெருப்புச் சூறாவளியின் முன்னே அவனை நிறுத்துகிறார்கள். ஒரே இருள்! ஒரே வேதனை!! தீ! தீ!! தீ!!! ஊழித்தீ! பயங்கர உலகம்!! நெருப்புச் சூட்டில் கண்களின் கருவிழிகள் கழன்று விழுவது போன்ற உணர்ச்சி! வீரிட்டலறினான் அலோசியஸ். "மேரி" என்று உரக்கக்கத்தினான்.

பயங்கரமான கனவில் இருந்த அலோசியஸ் திடுக்கிட்டெழுந்தான். கனவின் மருட்சி இன்னும் அவன் முகத்தை விட்டகலவில்லை. கண்ட கனவை மீண்டும் ஒருமுறை நினைவுகூர்ந்த அவன், விளக்கைப் போட்டான். அவன் மனதிலே ஒருபெரிய மாற்றம் நடந்துகொண்டிருக்கிறதை அவன் முகம் காட்டியது. தரையிலே தனது அடியின் வலிவுதாளாத மேரி துவண்டுகிடப்பதைப்பார்த்த அலோசியசின் கண்களிலே நீர்ததும்பியது. "மேரி" என்று கத்தியபடி அவளை அப்படியே வாரியணைத்துக்கொண்டான். விழித்தெழுந்த மேரி ஒன்றும் புரியாது திகைத்தாள். அவனின் மார்பில் தன்முகத்தைப் புதைத்துக் கொண்டாள். கண்களிலே நீர்சோர, "என்னை மன்னித்துவிடு மேரி! கடவுள் என் அறியாமை இருள்படைத்த கண்களைத் திறந்துவிட்டார். என்னைப் பார் மேரி! இனி உன்கணவன் திருந்திவிட்டான் மேரி!" எனக்கூறினான். மேரியின்பார்வை தேவதாயின் கருணைபொழியும் படத்தை நோக்கியது. "உன் நம்பிக்கை காப்பாற்றப்பட்டது" என அன்னை கூறுவதுபோல் இருந்தது மேரிக்கு.

டிசம்பர் 25-ந் தேதி புத்தாடை பூண்டு, புன்னகைததும்ப அலோசியஸ் சென்றுகொண்டிருந்தான். பக்கத்திலே கையில் குழந்தையுடன் மேரி மனநிறைவோடு ஆலயத்தை நோக்கி வந்துகொண்டிருந்தாள். தூரத்திலே, ஆலயமணியின்ஓசை காற்றில் மிதந்துகொண்டு வந்து இவர்களின் செவிகளிலே மோதி "உங்கள் வாழ்வில் விடிவெள்ளி தோன்றிவிட்டது, மகிழ்வோடு ஆலயத்துக்கு வாருங்கள்" என்று சொல்வதுபோல் இருந்தது.

எஸ். பெனடிற்,

### இளவாலை
### அர்ச். என்றியரசர் கல்லூரி
### பிரவேசப் பரீட்சை 1963

மேற்படி கல்லூரியில் 1963-ம் ஆண்டு சேரவிரும்பும் மாணவர்கட்கு இம்மாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிமண்டபத்தில் பிரவேசப்பரீட்சை நடைபெறும்.

12-12-62 அதிபர்.

### திருமதி லூ. அந்தோனிக்கம் அவர்கள்
மண்ணுலகைநீத்த
### 4-ம் வருட ஞாபகதினம்

"இரக்கமுள்ள யேசுவே! மரித்த அந்தோனிக்கத்தினுடைய ஆன்மஇளைப்பாறிக்காக இரக்கங்கூர்ந்து கருணைசெய்தருளுஞ் சுவாமி; முடிவில்லாத பிரகாசம் இவளின்மேல் பிரகாசிக்கக்கடவது: சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

இதைக்கண் றும் அன்பர்களும், விசுவாசிகளும் இவ்வேண்டுதலைமேற்கொள்ளுமாறு வேண்டிநிற்கின்றோம்.

கணவர்: வ. லூக்கேஸ்பிள்ளையும்
மகள், மருமகன், மைத்துனரும்
கரவெட்டி

### நேர்த்திக்கடன்

அர்ச். அந்தோனியாருடைய இரக்கத்தினால் காணமற்போன பணத்தொகையை நான் கண்டடைந்ததற்கு அவருக்கு இத்தால் நன்றித்துதி செலுத்துகிறேன்.

ஓர்பக்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது ஆபிரிக்கயாத்திரை—19

# ஒரு வேடிக்கையான வைபவம்

— வண. பிரான்சிஸ் ரிப்பேஅடிகளார்

**11 வைகாசி 1960.**

பகலவனின் கதிர்கள் பலமாக எம்மைத்தாக்கத் தொடங்கின. உஷ்ணம் மிக அதிகமாகக் காணப்பட்டன. சமுத்திரத்திலும் பலமான அலைகள் தோன்றிக் கப்பலை ஆட்டி அசைத்தன. கப்பலின் உயர் அதிகாரியொருவர் அங்கு பலமான நீரோட்டங்கள் அமைந்துள்ளன எனக் குறிப்பிட்டார். எனவே, கப்பலின் மூன்று எந்திரங்களும் இயங்க ஆரம்பித்தன. எனினும் அலைகளின் கொடுமையை நாம் உணர்ந்தோம். அலைகளின் அலைக்கழிவால் மொம்பாசாவுக்குக் குறிப்பிட்ட நேரத்திலும் தாமதித்தே செல்லக்கூடுமென அறிவிக்கப்பட்டது.

கப்பலுக்கு மிகச் சமீபத்தில் பறக்கும் மீன்கள் ஏராளமாகக் காணப்பட்டன. அவற்றைப் பிடிப்பதற்காகப் பறந்துகொண்டிருந்த பல பறவைகளையும் கண்டுமகிழ்ந்தோம். சூரியனின் ஒளியில் இப்பறக்கும் மீன்கள் சிறு விமானங்கள்போல் இலங்கின.

எமது நாவாய் சோமாலியாவிலிருந்து 100 மைல் தொலைவிலுள்ளது. இப்போது நாம் தாண்டிக்கொண்டிருக்கும் குடாவின்பக்கமாகவுள்ள நீரோட்டம் மிக உக்கிரமானது. அதனால் நாம் பெரிதும் துன்பம் அனுபவித்தோம். கடந்த 24 மணித்தியாலங்களிலும் எமது கப்பல் 410 மைல்களையே கடக்கமுடிந்தது.

தேநீர் இடைவேளையின்போது கப்பலின் பிரதம அதிபர் பரிசுகளை விநியோகித்தார். இவை கப்பலில் நடைபெற்ற போட்டிகள், அலங்கார அணிவகுப்பு, முதலியவற்றில் வெற்றி பெற்றோருக்கானவை. பரிசுகளாக காசோலைகள் வழங்கப்பட்டன. இக்காசோலைகளைக் கப்பலின் தேநீர்விடுதியில் அல்லது பண்டகசாலையில் பொருட்களைவாங்கிக் கொள்வனவு செய்வதற்காக அல்லது உணவுகளை வாங்குவதற்காகச் செலவிடலாம்.

மாலைச்சூரியன் மறைய முழுமதியும் முகிலைக் கிழித்துக்கொண்டு உதயமானான். கப்பலில் பிரயாணம் செய்யும் எழுத்தாளர் ஒருவரும், யானுமாகக் கப்பலின் மேற்றளத்தில் அமர்ந்து இக்காட்சியை வர்ணித்தோம்; அனுபவித்தோம். பகலெல்லாம் கடும்உஷ்ணத்தால் பாதிக்கப்பட்ட பின் இப்போது குளிர்ந்த தென்றலை முழுமதியின் தண்ணிலவுடன் அனுபவிப்பது மிக ஆனந்தமூட்டியது.

எனது இன்றைய குறிப்புகளை நிறுத்துவதற்குமுன் மகிழ்ச்சிகரமான சேதியொன்றைத் தெரிவிக்க வேண்டும். சில நிமிடங்கட்கு முன்பாகக் கப்பலின்பொருளாளர் என்னைச் சந்திக்க வந்தார். சில தினங்களின் முன்னர் இழந்துபோன தூரதிருட்டிக் கண்ணாடியைக் கொண்டுவந்தார். கப்பலின் மேற்றளத்தில் அமர்ந்துவிட்டு எழுந்தபோது தவறுதலாகக் கண்ணாடியை அங்கேயே விட்டிருக்கிறேன். ஒரு சீமாட்டி பின்னர் அதைக்கண்டெடுத்தாள். ஒரு அதிகாரியிடம் ஒப்படைத்தாள். அவர் அவசரமாகச் சென்றதினால் எங்கேயோ வைத்துவிட்டார். தற்போதுதான் அவருக்கு கண்ணாடிபற்றிய நினைவுவரவே அதைப் பொருளாளரி[illegible] ஒப்படைத்திருக்கிறார். [illegible]னிடம் இப்போது இருதூர[illegible]க் கண்ணாடிகள் உள.

**[illegible]2 வைகாசி 1960.**

நேற்றைய சீதோஷ்ணமே இன்றும் காணப்பட்டது. இன்றுகாலை சமரேகையைத்தாண்டினோம். சமரேகையைக் கப்பல்கள் தாண்டும்போது சில சம்பிரதாய வைபவங்கள் நடாத்துவதுண்டு. இங்கும் அவை இடம்பெற்றன.

காலை ஆகாரத்தின்போது கப்பலின் அதிபர் முக்கியதோர் பிரகடனத்தை வாசித்தார். சமரேகையின் அதிபரான நெப்ரியூன் அரசர் அரசியுடனும், பரிவாரங்களுடனும் பகல் பத்தரை மணிக்குக் கப்பலின் மேற்றளத்துக்கு வருகைதருவாரென அப்பிரகடனத்தில் குறிக்கப்பட்டிருந்தது. பிரயாணிகளனைவரும் பகல் பத்துமணிக்கே மேற்றளத்தில் கூடிவிட்டனர். ஆயினும், நெப்ரியூன் அரசரும், அவரது பரிவாரங்களும் பகல் பத்தேமுக்கால் மணிக்கே வருகை தந்தனர்.

கப்பலின் பிரதம அதிபர் அரசரையும், அரசியையும் வரவேற்று உபசார வார்த்தைகளைப் பரிமாறினர். அவரது பரிவாரங்களுடன் அரசரின் நாவிதனும், பல்வைத்தியரும், மருத்துவரும் காணப்பட்டனர். இவர்கள் மூவரும் நாடகங்களில் காணப்படும் கோமாளிகளை எனக்கு நினைவுக்குக் கொணர்ந்தனர். நீச்சல் தடாகத்தின் பக்கமாக அரசர் அமர்ந்து தனது அரசதர்பாரைத் தொடக்கிவைத்தார். பிரயாணிகளில் தாமாக முன்வந்த சிலர் ஒவ்வொருவராக அரசரின் முன்பு கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள். அவர்கள் ஒரு நாற்காலியில் அமர்ந்துகொள்ள அரசர் விசாரணையை நடாத்துவார்.

விசாரணையின்போது பல்வைத்தியரும், மருத்துவரும் குற்றவாளிகளின் மீது பல கோமாளிவித்தைகளையும் செய்வர். நாவிதனின் கையில் இரு வாளிகள் இருந்தன. அவற்றில் பச்சை வர்ணம்கலந்த நீர்காணப்பட்டது. குற்றவாளிகளின் தலையில் நாவிதன் பச்சைவர்ணத்தில் சிறிதை அபிஷேகம் செய்வான். இறுதியாக நீச்சல் தடாகத்தில் குற்றவாளி தள்ளப்படுவான்.

கப்பலில் என்னுடன் ஒரு கத்தோலிக்க குருவரும் பிரயாணம் செய்ததாகக் குறிப்பிட்டேன் அல்லவா? அவரது நாமம் றேயன் என்பது. மிகவும் நகைச்சுவை நிரம்பியவர் அவர். எல்லாருடனும் தாராளமாகப் பழகும் சுபாவம் அவருடையது. நெப்ரியூன் அரசரின் முன்னால் கடைசிக்குற்றவாளியாக றேயன்சுவாமியார் வந்தபோது பலத்தகரகோஷமும், ஆர்ப்பாட்டங்களும் எழுந்தன. சுவாமியாரின்மேல் சாட்டப்பட்ட குற்றங்கள் விநோதமாக இருந்தன. ஈற்றில் அவரும் நீச்சல் தடாகத்துக்குப் பலியானார். தொடர்ந்து நாவிதன், மருத்துவன், பல்வைத்தியர், மற்றும் அரசரின் பரிவாரங்கள் அனைவரும், கடைசியாக அரசியும், அரசரும் பச்சைவர்ண அபிஷேகத்துடன் நீச்சல் தடாகத்தில் தள்ளப்பட்டனர். இந்த நிகழ்ச்சி பார்வையாளர்களை வயிறுகுலுங்கச் சிரிக்கவைத்தது என்பதை இங்கு குறிப்பிடுதல் அவசியம்.

ஒலிபரப்பி சில அறிவிப்புகளைக் கூறியது. அதன்படி நேற்றுப் பகலுக்குப்பின்னால் இப்போதுவரை 422 மைல்களைத் தாண்டிவிட்டோம். ஏடின் நகரிலிருந்து 1309 மைல்கள் வந்துவிட்டோம். மொம்பாசா 342 மைல் தொலைவில் உள்ளது. லண்டன் துறையிலிருந்து எமது கப்பல் 6302 மைல் தொலைவில் நிற்கிறது. நாளைக் காலை வெள்ளிக்கிழமை 8 மணிக்கு மொம்பாசாவில் எமது கப்பல்தரிக்கும்.

மொம்பாசாவில் எமது நாவாய் அடுத்த செவ்வாய்க்கிழமை பகல்வரை காத்திருக்[illegible]ம். அதுவரை விரும்பிய இடங்களையெல்லாம் சுற்றிப்பார்க்க வசதியுண்டு. பி[illegible]யாணிகள் பலதிட்டங்களையிட்டனர். நெய்ரோபிக்கு விமானமூலம் [illegible] எனது திட்டம்.

இரவுவிருந்தின்போது பிரயாணிகள் அனைவருக்கும் ஞாபக வெளியீடு ஒன்று அளிக்கப்பட்டது. கப்பலிலேயே அச்சிடப்பட்டது இவ்வழகியசிறு மலர். கென்யா கோட்டை கேப்ரவுண் துறையில் நிற்கும் அழகியகாட்சி அட்டையில் காணப்பட்டது. லண்டனில் எமது பிரயாணம் ஆரம்பித்தது முதல் இன்றுவரை நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளனைத்தும் இம்மலரில் காணப்பட்டன.

விருந்தின் பின்னர் மொம்பாசாவில் தரிக்கும் பிரயாணிகட்குப் பிரிவுபசாரமளிக்குமுகமாக நடனக்கச்சேரியொன்று நடாத்தப்பட்டது. எல்லாப் பிரயாணிகளும் மகிழ்ச்சியுடன் பங்கு பெற்றனர். அபடீனிய நண்பரொருவருடன் யான் கப்பலின் மேற்றளத்துக்குச் சென்று சம்பாஷித்துக் கொண்டிருந்தேன்.

வளரும்.

# பேசும் பேனா

### பைபிள் கதைகள் :

பைபிள் கதைகளைத் திரைப்படமாக்கும் முயற்சிகள் ஐக்கிய அமெரிக்காவில் தற்போது பெருமளவில் நடைபெற்றுவருகிறதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது. இதற்குக்காரணம் பைபிள் கதைகள் அமரத்துவம் வாய்ந்தவையாக இருப்பதும், இதுவரை காட்டப்பட்ட பைபிள் திரைப்படங்கள் அமோகமான வெற்றியையும், பெரும் பணத்தையும் பெற்றிருப்பதுமே.

ஆயினும் பைபிள் கதைகளைப் படமாக்குபவர்கள் பைபிள் ஆராய்ச்சி என்ற பெயரால் மூலக்கதையில் இல்லாத சிலவிஷயங்களையும் புகுத்திவிடுகிறார்கள். கதையின் போக்குக்கு இவ்வித நிகழ்ச்சிகள் — அம்சங்கள் அவசியமாயிருப்பினும் அதனால் நம் திருமறையைப்பற்றி கிறிஸ்தவரல்லாதோர் சில தப்பபிப்பிராயங்களைக் கொள்ளவும் இடமளிக்கிறது.

சாலமோனும் சீபாவும், என்ற திரைப்படம் தற்போது இலங்கையில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது: தாவிதும் கோலியாத்தும் என்னும் திரைப்படமும், எம். ஜி. எம். நிறுவனத்தாரின் அரசர்களின் அரசர் என்ற கோடிக்கணக்கான டாலர்களைச் செலவிட்டு எடுக்கப்பட்ட திரைப்படமும் இம்மாதமத்தியில் இலங்கையில் திரையிடப்படும்.

எம். ஜி. எம். நிறுவனத்தார் தங்கள் படப்பிடிப்புக் கருவிகளையும், நிபுணர்களையும் வெகு செலவில் ஸ்பெயினுக்குக் கொண்டுவந்து அங்கு வருடக்கணக்காகப் பெருமுயற்சியுடன் தயாரிக்கப்பட்ட திரைப்படம் அரசர்களின் அரசர். படம் தயாரிக்கப்படும்போதே பார்வையிடவந்த திரையுலக பிரமுகர்கள் அதன்சிறப்பைக் கண்டு போட்டிபோட்டுக்கொண்டு தங்கள் நாடுகளில்திரையிடும் உரிமையைக் கேட்ட தொகையைக் கொடுத்து பதிவுசெய்துவிட்டனராம். முன்பு பல பெயர்களில் கிறிஸ்துவின் சரிதை திரைப்படங்களாக வெளிவந்துளது. அத்தனைபடங்களும் வெற்றியீட்டியுள்ளன. இப்போது வெளிவரும் அரசர்களின் அரசர் திரைப்படமும் அதேசரிதையையே சித்திரிக்கிறது. ஆயினும் மகத்தான வெற்றியைப்பெறும். ஏனெனில் கிறிஸ்துவின் வரலாற்றைவிடச் சிறந்ததொன்று உலகில் ஏது.

### கிறிஸ்துவின் மனைவி யார்?

கிறிஸ்துவின் மனைவியின் பெயர் யாது? இப்படிக்கேட்டான் ஒரு மன்னன். முப்பதுவருடங்களின் முன்னால் கத்தோலிக்க குருக்கள் தென் ஆபிரிக்காவிலுள்ள பாஸ்டோலாண்ட் என்ற தேசத்துக்கு முதலில் சென்றபோது கல்வினிஸ்ற் சபையார் அவர்களில் ஆத்திரம்கொண்டனர் எனவே அரசனிடம் அவர்களைப்பற்றிக் கோள் மூட்டினர். கத்தோலிக்க குருக்களுக்கு இல்லறவாழ்க்கைபற்றித் தெரியாது. அவர்கள் திருமணம் செய்வதில்லை. திருமணம் செய்யாதவர்கட்கு உங்கள் சமூகத்தில் இடமளிக்கலாமா என அரசனிடம் முறையிட்டனர்.

அரசன் தென்ஆபிரிக்க மக்கள் போன்று மூடக்கொள்கைகள் நிரம்பியவன். இருப்பினும் ஓரளவு கல்வியறிவும் பெற்றவன். நீங்கள் யேசுக்கிறிஸ்து காட்டியபாதையில் செல்பவர்கள்தானே என வினவினான். ஆமாம் எனக் கல்வினிய மதப் பிரதமபோதகர் பதிலளித்தார். கிறிஸ்துவின் மனைவிக்குப் பெயரென்ன என்று மேற்கூறியவாறு மன்னன் தொடர்ந்து கேட்டான். கிறிஸ்து திருமணம்செய்யவில்லை. பிரமச்சாரியாகவே இருந்தார் எனப் பதில்வந்தது.

அப்படியானால் கத்தோலிக்க குருக்கள்தான் கிறிஸ்துவின் பாதையில் செல்பவர்கள். தங்கள் போதகரைப் போலவே அவர்களும் பிரமச்சாரிகளாக இருக்கிறார்கள் எனக்கூறிய மன்னன் தனதுநாட்டில் கத்தோலிக்க வேதத்தை அவர்கள் போதிப்பதற்கு அனுமதி வழங்கினான். கத்தோலிக்க குருக்கள் ஏன் விவாகம் செய்வதில்லை என இன்று சிலர் வினவுகிறார்கள். கத்தோலிக்கனல்லாத அந்த மன்னன் கொடுத்தவிடையை இவர்கள் சிந்திப்பின் உண்மை புலனாகுமல்லவா?

### பிரமுகர் யார்?

அர்ச். பிரான்சிஸ் அசிசியாரின் சமாதானப் பிரார்த்தனையைத் தமது படுக்கையறையில் வரைந்து தினசரி காலையிலும், மாலையிலும் அதனைப் பிரார்த்தித்து அந்த லட்சியத்திற்காகவே தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் காலஞ்சென்ற எலியனார் ரூஸ்வெல்ட் அம்மையார். 3 தடவைகள் அமெரிக்க அதிபராகத் பதவிவகித்த பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டின் துணைவி இவர். கணவர் காலமானபின் கடந்த பதினேழுவருடங்களாக உலகமடங்கிலும் சுற்றி சமாதானம், அகதிகள் பராமரிப்புஎன்ற பணிகளில் தமது காலத்தைக் கழித்தார். அண்மையில் இவர் காலஞ்சென்றபோது அவரது பிரேத அடக்கச்சடங்குகளில் இன்றைய ஐ[illegible]

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## 21-12-62 வெள்ளி

## சுத்தபோசனமும் ஒருசந்தியும்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday December 15-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org